கலா சிந்தாமணி

" அகர முதல வெழுத்தெல்லா மாதி,
பகவன் முதற்றே யுலகு "

—திருக்குறள்.

புத்தகம்	காளயுக்தி ௵ ஆனி ௴	சஞ்சிகை.
3	ஜுன் ௴ 1918	9

கடவுள் வணக்கம்

அனந்தபதவுயிர்களொருமுயிராயென்று
மானந்தநிலையாகியளவைக்கெட்டாத்
தனந்தனிச்சின்மாத்திரமாய்க்கீழ்மேல்காட்டாச்
சதசத்தாயருட்கோயிற்றழைத்ததேவே!
யினம்பிரிந்தமான்போனானிடையாவண்ண
மின்பமுறவன்பர்பக்கலிருத்திவைத்துக்
கனந்தருமாகனமேதண்ணருளிற்றேனே
கனிபலித்தவானந்தக்கட்டிப்பேறே!

பேறனைத்துமணுவெனவேயுதறித்தள்ளப்
பேரின்பமாகவந்தபெருக்கேபேசா
விறனைத்துமிந்நெறிக்கேயென்னவென்னை
மேவென்றவரத்தேபாழ்வெய்யமாயைக்
கூறனைத்துங்கடந்தவெல்லைச்சேடமாகிக்
குறைவறநின்றிடுநிறைவேகுலவாநின்ற
வாறனைத்தும்புகுங்கடல்போற்சமயகோடி
யத்தனையுந்தொடர்ந்துபுகுமாதிநட்பே!

—தாயுமானவர்.

1918ஸு ஜூன் – ஜூலைமீ

ர-கு	பு-கே	சு	
ச	ஜூன்மீ 15உ க்கு ராசி.		
கு		மா	

காளயுக்தி ஸு ஆனி மீ

உத்தராயணம் கிரிருது	பசலி 1326 1327	சாலி 1840
கொல்லம் 1092	கலியுகம் 5019	ஹிஜரி 1335

யோகம்	இங். மீ.	தமிழ் மீ.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், முதலியன.
ம	14	1	வெ	வக்ஷ் 54-1, மக 59-24, தி 27-3.
சி	15	2	சனி	ஸப் 58-8, பூரம் 60-0, தி 21-22.
சி	16	3	ஞா	அஷ் 60-0, பூரம் 5-19, தி 25-12.
சி	17	4	திங்	அஷ் 3-2, உத்தி 11-38, ரா 2-30
சி	18	5	செ	நவ 8-4, ஹஸ் 18-11, ரா 7-55.
சி	19	6	புத	தச 12-59, சித் 24-35, ரா 7-30
அ	20	7	வி	ஏகா 16-28, சுவா 30-24, ரா 13-46.
சி	21	8	வெ	துவா 20-55, விசா 35-15, ரா 13-27.
சி	22	9	சனி	திர 23-22 அனு 39-15, ரா 21-24.
ம	23	10	ஞா	சதுர் 24-36. கேட் 41-56.
சி	24	11	திங்	○பரு 24-32, மூல 43-18, தி 2-18, ரா 6-47
சி	25	12	செ	பிர 23-13, பூரா 43-27, தி 7-21.
அ	26	13	புத	துவி 20-45, உத் 42-29, தி 3-7, ரா 19-46
சி	27	14	வி	திரி 17-14, திருவோ 41-0, ரா 17-56
சி	28	15	வெ	சௌ 12-50, அவி 37-41, ரா 22-14.
ம	29	16	சனி	பஞ் 7-42, சத 34 20, ரா 16-51.
சி	30	17	ஞா	வக்ஷ் 2-2, ஸப் 54-1, பூரட் 30-24, ரா 20-0
சி	1	18	திங்	அஷ் 49-45, உத்திரட் 26-16, ரா 21-38.
சி	2	19	செ	நவ 43-35, ரேவ 21-48, சித்தயோகம்.
ம	3	20	புத	தச 37-53, அசு 18-5, தி 8-36. ரா 8-13
சி	4	21	வி	ஏகா 32-12, பர 14-27, * கிரு. விரதம், ரா [10-33
சி	5	22	வெ	துவா 27-23, கிரு 11-24, ரா 17-30,
அ	6	23	சனி	திர 23-21, ரோ 9-5, தி 22-29, மாசசிவரா.
சி	7	24	ஞா	சதுர் 20-15, மிரு 7-15, தி 28-27, அமா.
சி	8	25	திங்	●அமா 18-17, திரு 7-21, ரா 5-26 [தர்பணம்
சி	9	26	செ	பிர 17-30 புனர் 8-12, தி 28-50.
சி	10	2	புத	துவி 17 37, பூசம் 10-7, ரா 11-45.
சி	11	23	வி	திரி 19-43, ஆயி 13-36, ரா 13-32
ம	12	29	வெ	சௌ 22-41, மக 18-4, ரா 7-33. [சமி.
சி	13	30	சனி	பஞ் 26-36, பூர 23-31, ரா 16-6, ஸ்கந்த பஞ்
அ	14	31	ஞா	சஷ்ஷ் 31-15, உத்தி 29-42, ரா 21-43.
சி	15	32	திங்	ஸப் 36-15, ஹஸ் 36-14, ரா 26-9.

தமிழ்ப்பரிசில்

(இது, யாழ்ப்பாணம் சைவசித்தாந்த மஹாசபை 14-ம் வருடாந்தக் கூட்டத்தில் (1918-ம் ஹு மேமீ 5வ்)ஸ்ரீயுத ச. சபாரத்னமுதலியார் அவர்களது தலைமையில், மேலைப்புலோலி ஸ்ரீ பொ. நடராஜன் அவர்கள் செய்த உபந்யாசம்.

"வார்த்தை பதினாயிரத்தொருவர்" என்பதை அறியாது, பெருந்தன்மை வாய்ந்த பிரபுக்களையுடைய இக்கற்றவர் கழகத்தின்கண்ணே, கல்வியறிவிற் குறைந்தவனாகிய நானும் 'தமிழ்ப் பரிசில்' என்னும் விஷயமாகப் பேசுவான் துணிந்து முன்வந்து விட்டேன். என்னுடைய கல்வியறிவு எவ்வளவு குறைவாயிருப்பினும், இச்சமாஜத்தின் கண்ணே உபந்யாசித்த நல்லறிஞர் வார்த்தைகளை இத்துணையுங் கேட்டுக்கொண்டிருந்த தன்மையானே, எனக்கும் பேசுஞ்சக்தி ஒரு சிறிது வந்திருக்கக்கூடுமென்னுந் துணிவே, என்னுடைய நாணத்தை அடியோடு நீக்கிவிட்டதென்க.

முன்னை நாட்களில் நமது தாய்த்தேசமாகும் இந்தியாவில் தென்னாட்டிலும், எமது அழகிய ஈழநாட்டிலுள்ள இவ்வியாழ்ப்பாணத்தும், அரசபாஷை இனிய தமிழாகவே இருந்தது. அக்காலத்து இதற்கு இருந்த பெருமையும், பெருந்தன்மை பொருந்திய இப்பாஷாவிற்பன்னர்களிட மிருந்தபெருமதிப்பும், என் நாவில் அடங்குவதல்ல.

இதனை முற்றாய் விரித்துரைக்கவல்ல நாவன்மை பொருந்திய ஒருவர் இருந்தாரென்றும் இருக்கிறாரென்றும் இருப்பாரென்றும் சொல்லவும் ஒரு சிறிதும் வல்லேனல்லன். ஆனால், அக்காலத்து இதற்கு இருந்த பெருமதிப்புப்போல வேறெந்தமொழிக்கும் இதுவரையும் இருக்கவில்லையென்று மாத்திரம் துணிந்துசொல்ல அறிந்துள்ளேன். இத்தகைய பெருமைவாய்ந்த தமிழைப்படித்த புலவர்கள், அக்காலத்து அரசர்களையும் மதியாதிருக்க, அவ்வரசர்களும் இவர்கள் ஏவல்வழி ஒழுகினார்களென்பது, புறநானூறு முதலிய பண்டைத் தமிழ்நூல்களால் அறியலாம். இப்படிப்பட்ட சிறப்பினையுடைய தமிழுக்கு ஒருவர் அருமையறியாது பரிசிலளிப்பரேல் அது பெரிது மிகழப்படும். தமிழ்ப் புலவரொருவருக்கு எத்துணைப் பெரும்பொருளுபகரிப்பினும், அது தன்னிடத்துள்ள தெய்வத் தமிழிற்காகக் கொடுக்கப்படவேண்டிய கடமையென்று அப்புலவர் கருதுவரேயன்றி, தான் ஒருவரிடத்து ஏற்பதென்னும் எண்ணம் அவர் மாட்டிராது. கொடுப்போரும் அங்ஙனங்கருதார். அக்காலத்து அரசர்—

...மிழ்க்கவிகள் தம்மேல் பாடல்வேண்டுமெ
...ப்புடையர். இதனை,

...ங்கியசிறப்பி னுயர்ந்தகேள்வி
மாங்குடிமருதன் றலைவனாக
வுலகமொடுநிலைஇய பலர்புகழ்சிறப்பிற்
புலவர்பாடாது வரைகவென்னிலவரை.” என்று தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சொல்லியதினாலும், பொன்னியென்னும் பெயரினையுடைய ஏழைத் தாசியொருத்தி, கம்பரால் பாடல்பெறவிரும்பி, தன்னிடத்திலுள்ள பொருள்முழுவதையும் அவருக்கு ஈந்து,

“தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே.” என்று தன்னுடைய பெயர்தானும் வராத குறைப்பாட்டுப் பெற்றதனாலும் அறியலாம். இவைகள் அக்காலத்துமக்கள் தமிழின்மீதுகொண்ட அடங்கா ஆர்வத்தைக் காட்டுவனவன்றோ?

இந்தத்தாசி இந்தப்பாட்டைப் பெற்றது,முதலிடை கடையென்னும் முச்சங்கங்களும் அழிந்தொழிந்த காலத்திலென்றால், இச்சங்கங்கள் இனிய தமிழை உயிரெனவளர்த்தகாலத்து இதற்கு இருந்தமானம் இனைத்தென ஒருவரால் எடுத்தியம்பல் கூடுமோ?

இத்தகைய தமிழ்மொழிக்குக் கொடுக்கப்பட்ட பரிசில்கள் முற்றாக எடுத்தோத ஒருவரால் இயலாதாயினும், நானறிந்தவற்றுள் விசேடித்த சிலவற்றை மாத்திரம் இங்குச்சொல்வேன்.

க. பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தைப் பாடியதற்காகக் கபிலர் என்னும் புலவர், சேரனிடம் நூறாயிரங்காணம் பொன்னும், அவன் ஒரு மலைமீதேறிக் கண்டு கொடுத்த நாடும் பெற்றனர்.

உ. பரிசில் பெறுவோர் இங்ஙனம்பொன், பூமி, யானை, குதிரை, தேர் என்பவற்றைப் பெறுவதன்றி,

“பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.” என்றபடி, ஒருவன் பெறும் பேறுகளுட் சிறந்ததாகிய புத்திரப்பேற்றை,—அதிலும் அறிவுள்ள அழகிய அரசிளங்குமரனை, அவன் தந்தையாகிய அரசனே, இனியதமிழ் மொழிக்கு ஏற்றபரிசிலென உவந்துகொடுக்க, ஒருபுலவன் பெற்றதென்றால், அக்காலத்து நமது தெய்வத் தமிழ் மொழிக்கு இருந்தமானம் என்போல்வார் எடுத்துரைக்குந் தரத்ததோ?

இப்புத்திரப் பரிசில்பெற்ற பெருமைவாய்ந்த புலவர் யாரெனில், பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தைப்பாடி, செங்குட்டுவனிடம் பெருந்தொகைப் பொருளோடு அவன் மகனாகிய குட்டுவன் சேரலையும் பரிசிலாகப்பெற்ற சிறப்பினையுடைய புலவர் திலகராகிய பரணர் என்னும் பெயரினையுடைய கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவரென்க.

௩. அமிழ்தினுமினிய தமிழ் மொழியதனைக் காதாற்பருகிய மயக்கத்தானே, அதிகமானெடுமானஞ்சி யென்னும் வள்ளல், அருந்தினோர் அநேக காலத்திற்கு இறவாதிருக்கத்தக்க அமுதமயமாகிய வருந்திப் பெற்றதோர் அரிய நெல்லிக்கனியை, ஔவையார்க்குப் பரிசிலாய்க் கொடுத்துப் புகழ்பெற்றனன்.

௪. மூவேந்தரும் பறம்பு முற்றியிருந்தபோது, கபிலர் என்னும் புலவர்,

"கடந்தடு தானை மூவிருங்கூடி
யுடன்றனிராயினும், பறம்புகொளற் கரிதே.
முந்நூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு;
முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்;
யாமும் பாரியுமுளமே, குன்றுமுண்டு;
நீர்பாடினிர் செலினே." என்று பாரியென்னும் வள்ளலைப்புகழ்ந்து கூறிய இச்செய்யுள், அக்காலத்து வள்ளல் பாரி தமிழிற்குக் கொடுக்கும் பரிசிலை எவ்வளவு திறமையுடன் எடுத்தோதுகின்றது:

இங்ஙனங்கூறிய பரிசில்கள் ஒருவர் உயிரினுஞ் சிறந்ததாகாமையானும், தமிழுக்கு உயிர்பரிசிலாகக் கொடுக்கப்பட்டதென்றால் அதனையுங் கேட்கவேண்டுமென்னும் அவா எவருக்கும் இருக்குமென்று நான் எண்ணுகிறபடியாலும், அவ்வுயிர்ப் பரிசிலைச் சொல்லுகிறேன்.

௫. காட்டில் தனியிடத்திருந்தகுமணனிடம் பரிசில்வேண்டிய தமிழ்ப் புலவராகிய பெருந்தலைச் சாத்தனாருக்கு அவன் தன் தலையைக் கொடுக்கத்துணிந்தது உயிர்ப்பரிசிலன்றோ? குமணன் அந்நேரம் வேறொன்றும் கொடுக்க இயலாதிருந்தபடியால்தான் தன் தலையைக் கொடுக்கத் துணிந்தது.

அரசபதவியிலிருந்து கொண்டே தன்னுயிர் போவது கட்டாயமெனக்கண்டும், ஒருவர் கேளாதிருக்கத் தானேவலிந்து வந்து, வசைக்கலம்பகமென்றும் ஓராது, அரண்மனையிலிருந்து சுடுகாடுவரைக்கும் தொண்ணூற்றொன்பது பந்தலிடுவித்து, அதன்மேல் மயானத்தினடுவில் காஷ்டமடுக்குவித்து, ஒவ்வொரு பந்தரிலிருந்து ஒவ்வொரு கவியாய்க்கேட்க, அப்பந்தலெல்லாம்

உடனுக்குடன் வெந்து நீறுவதைப் பிரத்தியட்சமாய்க்கண்டும், ஒரு சிறிதாவது பதறாது, தொண்ணூற்றொன்பது பாடல்களை யுங்கேட்டு, எஞ்சிய நூறாவது செய்யுளையும் மயானத்திலடுக்கப் பட்ட விறகுக் குவியல்களின் மத்தியிலிருந்துகேட்டு ஆனந்தித் துத், தன்னுயிரைத் துரும்பென மதித்துவிட்ட நந்தியென்னுந் தொண்டைமான், தன்மீது பாடப்பட்ட வசைக்கலம்பகத்திற் காகக் கொடுத்தது உயிர்ப்பரிசிலன்றோ?

௬. இன்னும் இத்தெய்வத் தமிழிற்கு, உயிரிற் சிறந்த அரிய மனைவியரை உரிய பரிசிலாகக்கொடுக்க ஒருப்பட்டவர்களுமு ண்டு. இங்கொரு கேள்வியுண்டாகலாம். ஒரு கீழ்மகன் வந்து உன்னுடைய மனைவியைத்தா என்றுகேட்க, இதற்கு ஒருவன் உடன்பட்டனனென்றால், அவன் முழுமகனாகவேண்டும். இதை இச்சபையில் அறிஞர்கள், சீ! சீ! என்றிகழச் சொல்லலாமோ வென்னில், அப்படியல்ல.

பெரிய புராணத்தில் விதந்து கூறப்படும், இயற்பகை நாய னார், சிவனடியார் வந்து, 'இயற்பகையே' உன்னுடைய மனைவி யைத்தா, என்று கேட்க, அச்சிவ வேடத்தார்மாட்டுக் குணங் குற்றம் பாராது, சிவவேட மொன்றனையே நோக்கி, கற்பிற்சிற ந்த தமது அரிய பத்தினியாரைக் கொடுக்க முயன்றது எப்படிக்குற்றமான செயலென்று கொள்ளப்பட மாட்டாதோ, மனை வியைத் தாவென்று கேட்ட சிவபெருமான் செயலும் குற்ற முடையதென்று கனவிலுங் கருதப்பட மாட்டாதோ, அப்படி யேஇங்கும் மனைவியைக்கேட்டதமிழ்ப்புலவன் செயலும், கொடு க்கத்துணிந்த பிரபுவின் செயலும் குற்றமில்லாதவாறு காண்க.

இதனால் தமிழ்ப் பரிசிலாக ஒருவரிடத்துள்ள எந்த அரிய பொருளும் கொடுக்கலாமென்று காட்டிய வாறுமென்க. பெரு ந்தன்மை பொருந்திய புலவன், பிரபுவின் பத்தினியை அபக ரிக்கக் கருதிய தல்லவென்றுணர்க. பிரபுவின் தமிழபிமானத் தைப் பரீக்ஷித்தவாறு மென்றுணர்க.

என்னுடைய பேசசைப் பொறுமையுடன் கேட்டுக்கொ ண்டிருந்த பெருந்தன்மை பொருந்திய சபையாருக்கு மனமார ந்த வந்தனஞ்செய்து, தெய்வத்தமிழ் மொழியானது பண்டைய சிறப்பைப் பெறவேண்டு மென்று பகவானைப் பிரார்த்தித்து இத்துணையில் முடிக்கிறேன்.

இந்துமதச் சீர்திருத்தம்

இந்து மதத்தின், தற்கால நிலைமையும், முற்காலத்திலிருந்த, அதின் சிறப்பையும், நாம் சற்று உற்று நோக்கின்,நம் மதம் அடைந்திருக்கிற கெடுதல்கள், நமக்கு நன்கு விளங்கும். முன் காலத்தில், வெளி ஆடம்பரங்கள், குறைவாயிருந்தபோதிலும், தெய்வ பக்தியும். நன்றியறிவும், ஜனங்களின் மனதில், குடி கொண்டிருந்தன. அநேக மகான்கள், காட்டில் குடிசைகளில் வசித்துக் கொண்டு, தங்கள் வாணாட்கள் முழுமையும், தெய்வ சிந்தனையிலே காலங் கழித்தார்கள். இவர்களுக்கு அனேகர் பணிவிடை செய்து வந்தனர்.

இப்பொழுது, எல்லாம் முற்றிலும் மாருக நடக்கின்றன. நானாவித வாத்தியங்கள், சங்கீதங்கள், பலமான கோவில்கள், உற்சவங்கள் முதலிய வெளி ஆடம்பரங்கள் அதிகப்பட்டதான போதிலும், ஜனங்களுக்கு முன்னிருந்த நற்குணங்கள் குறைந்தே நிற்கின்றன. இவர்களுக்கு இது தோன்றவில்லை. இவர்கள் தங்கள் முன்னோர்களைவிட, வெளிவேஷங்களில் விளங்குவதாக தற்புகழ்ச்சி கொண்டாடுகிருர்கள். இவர்களிடத்தில்மதம் அகப்பட்டு விழிக்கிறது. ஆலயங்களில், கிரியைகள் சரிவர நடைபெறவில்லை. கோவிலதிகாரிகள், பாழூருக்கு நரி ராஜா என்பதுபோல கோவில் சொத்துக்களைத் தங்கள் குடும்ப உபயோகத்திற்கும், வேசையர்களுக்கும் வீண்வழக்குகளுக்காக, வக்கீல் முதலியவர்களுக்கும் இன்னும் தங்களிஷ்ட மித்திரர்களுக்கும் கொடுத்து வீணுகச் செலவிடுகின்றனர். கோவிலில் பூஜை செய்கிறவர்கள், மந்திரங்களை, ஐயந்திரிபறக் கற்றவர்களாயில்லை.

கோவிலதிகாரிகள் முதலிய பதவிகள், உலகத்தைத் துறந்த சந்நியாசிகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும்வழக்கத்தை நாம் சற்று உற்றுநோக்கின், அவர்கள் மற்றவர்களைப் போலன்று, தங்கள் மனதை எல்லாக் கவலைகளினின்றும் நீக்கி, திருவாலய காரியங்களை வழுவின்றி நடத்திவரும் பொருட்டேன்றே நாம் திண்ணமாக உணரலாம். இவர்கள் இவ்வாறு தங்கள் கடமைகளைச் சரிவர நடத்தாமலிருத்தற்கு முக்கியகாரணம். இவர்களை ஒருவரும் கேட்காமலிருத்தலே. தாமேஎஜமானராதலால்,தங்களிஷ்டப்படி இவர்கள் செய்கிருர்கள். இவர்கள் வைத்தால் குடு

மி, சிரைத்தால் மொட்டை. இவர்கள் வைத்ததே சட்டம். கோவில் சொத்தும் போதாமல் ஏராளமான கடன்களை வாங்கிச் செலவு செய்கிறார்கள். ஜனங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரும் பொருட்டே ஆலயங்க ளேற்பட்டிருக்கின்றன. அலைந்துதிரியும் நம்மனதை ஒருங்குபடுத்தி கடவுளைத் துதிக்கும் பொருட்டே, ஆலயங்களில் கல், செம்பு முதலியவைகளாற் செய்யப்பட்ட விக்கிரகங்களை, நாம் தொழுது வருகிறோம். இதினால், கடவுள் ஆலயத்தில்தா னிருப்பாரென்பதற்கில்லை. அவர் எங்கும் நிறைந்தவரென்பதும், நாமிருந்த விடத்திலேயே நாம் அவரைச் சிந்திக்கலாமென்பதும், பெரிய மகான்களுக்கன்றி பாமர ஜனங்களுக்காகவே கோவில்களென்றும், அவைகளுக்கு அதிக விமரிசையாய் நானாவித வாத்தியங்களுடனும், வான வேடிக்கைகளுடனும், நடக்கிற பலவித உற்சவங்களென்றும், தேர் என்றும், இத்தினங்களில் போய்க் கடவுளைத் தரிசித்து, திருக்குளம் முதலிய தீர்த்தங்களில், ஸ்நானஞ்செய்பவர்களுக்கு நற்பதவி கிடைக்குமென்றும், மேற்கூறிய உற்சவங்கள், உண்மையாகவே நடந்தகாரியங்களாக; புராணமுதலியவைகள்முறையிடுகின்றதைப் படித்தும், பிறர்சொல்வதையும பிரசங்கிப்பதையுங் கேட்டிருந்தும், மேற்கூறிய உற்சவங்களுக்கு வெகு கஷ்டப்பட்டுக்கொண்டு போகிற ஜனங்கள் தங்கள் மனதை ஒரு நிமிஷமாவது அசஞ்சலசித்தத்தில் கடவுளுக்கு அர்ப்பணஞ்செய்கிறார்களோ? இல்லையே! கடைத்தெருக்கள் சுற்றுகிறதும் தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்குகிறதும், தங்கள் பெண்டு பிள்ளைமுதலியவர்களுக்கு வரன்கள் தேடுகிறதும், வேசையர்களுடையவும், இன்னும் அங்குவருகிற மாதர்களின் அழகைக் கண்டு புகழ்கிறதும் தங்கள் வீட்டுக் காரியங்களை சுவாமிமுன் நின்று பேசுகிறதும், மேளவாத்தியத்தையே கவனித்துத் தலையசைக்கிறதும், இன்னும் பலவகையான காரியங்களிலேயேகாலமெல்லாம் வீணாகக்கழிக்கின்றனர் ஆனால்,சிலர்உற்சவங்களில், ஜனத்திரட்டுக் காரணமான மேளவாத்தியம், சங்கீதம், நாட்டியம் முதலியவைகளை நீக்கிவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதனால், சங்கீதம் முதலியவைகள் விருத்தியடைதற் கேதுவாயிருப்பதால்,அவைகளிருக்கவேண்டியனவே. தாங்கள் கருதிப்போகும் முக்கியமான காரியத்தைச்செய்தபின் (அதாவது கடவுளைத் தியானஞ்செய்தபின்) இவர்கள் எப்படிச

செய்தாலும், எங்குபோனாலும், எதைப்பற்றி உரையாடினாலும் யார் கேட்கிறார்கள்? அதைப்பற்றி யார்தான் என்ன சொல்லக்கூடும்? மனிதர்களுக்கு இன்பங்களை அனுபவித்தல் சகஜமே. இதற்கென்று போகிறவர்கள் மேளவாத்தியம் சங்கீதம் முதலியவைகளைக் கேட்க வேண்டாமென்று சொல்லவில்லை. தங்கள் முக்கிய காரியத்தைக் கவனித்தபின்; இவர்களிஷ்டப்படி செய்யவேண்டு மென்பதே.

மத அபிவிருத்திக்கு, உற்சவாதிகளைப் போலவே திருமடங்களும் சத்திரங்களும் இன்றியமையாதன. சத்திரங்கள் முன் காலத்தில், மகான்களுக்குத் தங்குமிடங்களா யிருந்தன.

ஆலயத்திலுள்ள புற்கள், செடி கொடிகள் முதலியவைகளின் வேர்களைக் களைதல் திருத்தோட்டங்களில், பூஜைக்காக நல்ல புஷ்பச் செடிகளை வைத்து வளர்த்தல், பூக்கொய்து, திருமாலை கட்டுதல், முதலிய கடவுளின் காரியங்களைச் செய்பவர்களுக்கும், இன்னும் வேலைசெய்து ஜீவனம் செய்ய முடியாதவும், தெய்வ சிந்தனையிலேயும், மதத்தையும் ஜனங்களையும் நல்லஸ்திதிக்குக் கொண்டு வரும்படிக்கும், தங்கள் வாணாட்களைக் கழிக்கும், மகான்களுக்கும், அன்னதான சாலைகளாகவும், பிரயாணஞ்செய்து களைத்த பிரயாணிகளுக்குத் தங்குமிடங்களாயும், சத்திரங்கள் ஏற்பட்டன. இப்பொழுது இதற்கு முற்றிலும் மாறாக நடக்கின்றன. சில சத்திரங்களில் பிராமணர்களைத்தவிர வேறொருவர்க்கும் அன்னமாவது, இடமாவது கிடைப்பது அரிதாயிருக்கிறது. இன்னும் பல சத்திரங்களில் பிராமணர்களைத்தவிர, மற்றெல்லா ஜாதியர்களுக்கு அன்னம் கிடைக்கிறது. இது என்ன ஆச்சரியம்? ஜீவாத்மா எல்லா ஜாதியர்களுக்கும் பொதுவே. பசி தாகம் எல்லாருக்குமே உள. மேல் கூறப்பட்ட சத்திரங்களின், அதிபதிகள், சத்திரங்கள் ஏற்பட்டதின் கருத்தையும், தரும மார்க்கத்தையும், அறிவார்களானால், அவர்கள் அவ்வாறு செய்வார்களா?

இவ்வாறே திருமடங்களும் ஜெபம், பூஜை முதலியவைகள் நன்கு நடைபெறும் பொருட்டும், வேதம் முதலியவும், இன்னும் மற்றுமுள்ள முக்கியமான தமிழ் நூல்கள், மடாதிபதிகளால் நியமிக்கப்பட்ட, கழகங்களில் விருத்தியாகும் பொருட்டும், கடவுளின் இன்னும் எல்லாக் காரியங்களும் பலவகை தருமங்களும் நிறைவேறும்பொருட்டும் ஏற்பட்டிருக்கின்றன.

N. M. சபாபதிமுதலியார், சீயாழி.

(இன்னும் வரும்)

சித்தாந்தம்

யாழ்ப்பாணம் சைவசித்தாந்த சமரசத்தின்
3-வது துண்டுப்பத்திரிகை.
(த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதியது.)

சித்தாந்த மென்பது வேதசிரசாகிய உபநிடதங்களினாலே முடிக்கப்பட்ட முடிவு. அதுவே சிவாகமமாகும். வேதாந்தத்தின் சாரமே சித்தாந்த மென்பதனை இந்தப் பத்திரிகையிலெடுத்துக் காட்டுவாம். இத்தேசத்தார் சிலர் சித்தாந்த மென்பது சிவஞான சுவாமிகளாலும் ஆறுமுக நாவலராலும் புதிதாகஉண்டாக்கப்பட்ட ஒரு புதுச்சமயமென்று சொல்ல, அறிவில்லாதவர் பலர் அதனை மெய்யென்று நம்பிக்கொள்ளு கின்றார்கள். சைவாகமங்களே சித்தாந்தமென்று இரத்தினத்திரய மென்னு நூலிற் சொல்லப்பட்டிருக்கின்றது. வேதாந்தமென்று சொல்லப்படுவது வேதசிரசாகிய உபநிடதங்களே யாம். பிற்காலத்திலிருந்த வேதவியாசமுனிவர் செய்த உத்தரமீ மாஞ்சையையும் வேதாந்தமென்று சொல்லுகின்றனர். இந்த உத்தரமீமாஞ்சை வியாசமுனிவராற் செய்யப்பட்டதன்று பூர்வ மீமாஞ்சைசெய்த சைமினி முனிவரே இதனையுஞ் செய்தாரென்று சிலர் கொள்ளுவர். வேதங்களின் கருமகாண்டத்தை அநுசரித்துப் பூருவமீமாஞ்சையும் ஞானகாண்டத்தை அநுசரித்து உத்தரமீ மாஞ்சையும் சைமினி முனிவராற் செய்யப்பட்டன வென்பது அவர்கருத்து. உத்தர மீமாஞ்சையாகிய வேதாந்தம் சூத்திர ரூபமாயுள்ளது. இதற்கு நூறுவகையான அர்த்தஞ் செய்யலாம். அது நிற்க. நாம் வேதாந்தமென்று இங்கே எடுத்துக்கொண்டது உபநிடதங்களே யாம். அந்த உபநிடதங்களுக்கும் சித்தாந்தத்துக்கும் வேறுபாடில்லை. இதுபற்றியே சுப்பிரமணிய சுவாமியுடைய வரப்பிரசாதம் பெற்ற குமரகுருபரசுவாமி "ஒரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த-ஆராவமுதி னருங்கனி பிழிந்து-சாரங்கொண்ட சைவசித்தாந்தத்-தேனமுதருந்தினர் சிலரே" என்றருளிச் செய்தார்.

1. சித்தாந்தமானது சிவனொருவரே பதி என்று சொல்லும். அப்படியே, நான்கு வேதமும் முடிந்த இடமாகிய அதர்வசிகை யென்னும் உபநிடத முடிவிலே (எல்லாவற்றையும் விட்டு, நன்மையைச் செய்பவராகிய சிவனொருவரே தியானிக்கற்பாலர். அதர்வசிகை முற்றிற்று. என்று சொல்லப்பட்டது. தம்மி

டத்திலேயே ஒப்பி ஒப்பி யென்று சொல்லிக்கொண்டுவந்த கிருஷ்ணரும் பகவற்கீதை முடிந்த இடத்திலே இந்தச் சிவனையே அருச்சுனா! ஈசுவரன் 'மாயா வியந்திரதனு' வினுள் நிற்கும் எல்லா ஆன்மாக்களையும் ஆட்டுகின்றான். எல்லாவற்றாலும் அவனையே சரணடை என்று அருச்சுனனுக்கு உபதேசித்தார்.

2. சித்தாந்தமானது அந்தச் சிவனுக்குச் சர்வஞ்ஞதை திருப்தி அநாதிபோதம் அநந்தசத்தி முதலிய குணங்களுண்டு என்று சொல்லும். அப்படியே யோகசிகோபநிடத மூன்றாமத்தியாய முடிவிலும் சொல்லப்பட்டது.

3. சித்தாந்தமானது "காயமே கோயிலாக" (திருநா. தேவாரம்) என்றும், "காட்டு கமலாசனமே லீசர்சதா சிவமுங் கலாமூர்த்தமா மிவற்றின் மேலாகுஞ் சத்தி-வீட்டையருள் சிவன்மூர்த்தி மானுகிச்சத்தி மேலாகி நிற்பனிந்த விளைவறிந்து போற்றே" (சித்தி. 9-9.) என்றும் சொல்லும். அப்படியே யோக சிகையென்னும் உபநிடதமும் ஃதாடங்கி, விந்து நாதம் மகாலிங்கம் சிவசத்தி கோயில் தேகமெடுத்தவர்க் கெல்லாம் சித்தியைக் கொடுக்கும் தேவாலயம் சரீரம் என்று சொல்லுகின்றது.

4. சித்தாந்தமானது "புத்திரமார்க்கம் புகலிற் புதியவிரைப்போது புகையொளி மஞ்சனம முதுமுதல் கொண்டைந்து புத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்திமானுஞ் சோதியையும் பாவித்தா வாகித்துச்சுத்த-பத்தியினு லருச்சித்துப் பரவிப்போற்றி" (சித்தி. 8-20.) என்றும், "புகையொளி மஞ்சனமமுது முதலாகக் கண்டனவெலா மனத்தாற் கருதிக்கொண்டு-சிந்தையினிற் பூசித்து" (சித்தி. 9-10) என்றும், தியானம் ஆவாகனம் ஆசனம் பாத்தியம் அருக்கியம் அபிஷேகம் சந்தனம்அக்ஷதை புட்பம் தூபம் தீபம் நைவேத்தியம் பிரதக்ஷிணம் நமஸ்காரம் தோத்திரம் என்பன இன்ன இன்ன பாவனையென்று கூறுகின்றது.

5. சித்தாந்தமானது "சன்மார்க்கஞ் - சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சிய மென்று சதுர்விதமாம்" (சித்தி. 818.) என நான்கு முத்தி கூறும். அப்படியே முத்திகோப நிடதமும் நான்கு முத்திகளையுஞ் சொல்லுகின்றது.

6. சித்தாந்தமானது "அருளின் வழிநின்-றஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க" (சித்தி. 9-8) என்று பஞ்சாக்ஷர செபத்தை விதிக்கின்றது. அப்படியே பஸ்மசாபாலோப நிடதமும் கூறுகின்றது.

7. சித்தாந்தமானது மேலேகாட்டிய "புத்திரமார்க்கம்" என்னுஞ் செய்யுளால் சிவலிங்கபூசை செய்யச்சொல்லுகின்றது. அப்படியே பசும சாபாலோப நிடதமும் (இலிங்கரூபியாகிய எம்மை யோகிகள் பூசித்துத் தியானிக்கிறார்கள்) என்று சொல்லுகின்றது.

8. சித்தாந்தமானது சிவத்தைச் சேர்ந்த உயிர், சிறைப்பட்ட நீர் முறித்துக் கடலிற் சென்றடங்கி மீளாதவாறுபோல மீளப்பிறவாது என்று சொல்லும். "தன்னிறை நீர் சிறை முறியமுடுகியோடி முந்நீர் சேர்ந்தந்நீராய்ப் பின் னீங்கா முறை போல்" (சித்தி. 8-37.) அப்படியே முண்டகோப நிடதமும் (எப்படி நதிகள் நாமரூபமற்றுக் கடலிற்சேர்ந்து விடுகின்றனவோ அப்படியே வித்துவானும் நாமரூப மற்றுப்பராற்பரனை புருஷனை அடைகிறான்) என்கின்றது.

9. சித்தாந்தமானது பசுவென்றும் பாசமென்றும் இரண்டுபொருள் கூறுகின்றது. அப்படியே மைத்திராயணியுபநிடதம் (பாசங்களாற் பசுப்போலப் பந்தம்) என்றும், சுவேதாச்சுவதரோப நிடதம் (ஆன்மா தேவனையறிந்து எல்லாப்பாசங்களாலும் விடுபடுகின்றது.) என்றும் கூறுகின்றன.

இடம் பெறாமையினால் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்காட்டினேம். விபூதிமான்மியம் அதனைத் தரிக்கும் உத்தூளன திரிபுண்டர முறைகள் உருத்திராக்ஷ மான்மியம் இவை முதலியபல விஷயங்கள் சைவாகமங்களிலும் பத்ததிகளிலும் ஆறுமுகநாவலருடைய சைவவினாவிடை முதலியவைகளிலும் சொல்லப்பட்டபடியே பிருகத்சாபாலம் முதலிய உபநிடதங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

இவைபற்றியே "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" என்றார் தாயுமான சுவாமிகள்; "வேதசிவாகமங்கட்குப் பேதங்காண்கின்றிலம் வேதமே சிவாகமம்" என்றருளினார் நீலகண்டசிவாசாரியர்.

ஜனகன்

முற்காலத்தில் ஜனகமகாராஜன் ராஜரிஷியென்று யாவராலும் கொண்டாடப்பட்டார். அநேகசாதுக்கள் அவரிடம்வந்து தங்களுக்குண்டான சந்தேகங்களைக்கூறி ஸமாதானம்தெரிந்துக் கொள்வது வழக்கம் ஒரு சமயம் ஒருபிராமணன் ஜனகனிடம் வந்து, ஹே அரசனே, நீ சிம்மாசனத்திலிருந்து ராஜ்யபாரம் செய்கிறாய். ராஜாங்கத்தைப் பற்றிய கவலைகள் உமக்கு அதிகமிருக்கும். உம்முடைய ராஜ்யத்தில் யாருக்கும் குறை உண்டாகாதபடி நீர் கவனித்து வருகிறீர். தினந்தோறும் ஏழைகளின் முறையைக்கேட்டு அவர்கட்கு இதம் செய்கிறீர். இப்படி அநந்தமான கிருத்தியங்களைச் செய்துகொண்டு, நீர் ராஜரிஷியென்னும் பட்டத்தை எவ்வாறடைந்தீர் என்றான். அதற்கு ஜனகன் சிறித்துக்கொண்டு நல்லது நான் சொன்னபடி நீர் சிறிதுநேரம் நடந்தால் உமக்குண்டான ஸந்தேகம் நிவர்த்தியாய் விடுமெனபிராமணன் அதற்கிசைந்தான். உடனே ஜனகராஜன் அந்தபிராமணனுடைய தலையை முண்டனம் செய்வித்து அதன்மேல் அகன்ற ஓர் பாத்திரத்தில் ரஜத்தையூற்றி நாலு சேவகர்களை உருவின கத்தியுடன் அந்த பிராமணனது இரண்டு பக்கங்களிலும் போகச்சொல்லி பட்டணம் முழுவதும் சுற்றிவரும்போது எங்கேயாவது அந்த விப்பிரன் துளிரசத்தைக் கீழே கொட்டினால் உடனே அவன்தலையை வெட்டிவிடும்படி ஆஞ்ஞாபித்தார். அத்துடன் அந்தப் பிராமணன் போகும்வழியில் திவ்யாலங்காரத்துடன் ஊர்வசி மேனகை போன்ற அழகிய ஸ்திரீகளையும் அணியணியாய் நிறுத்திவைத்தார். அநேகவிதமான ஆடல்பாடல்களெல்லாம் நடந்தன. வீடுகள் வெகு திவ்யமாய் சிங்காரிக்கப்பட்டிருந்தன. வானவேடிக்கைகள் வெகு அற்புதம். பலவிதமான ஜாலவித்தைகளும் நாடகங்களும் மார்க்கத்திலாடினார்கள். இவ்வளவு வைபோகத்துடன் 4-பக்கங்களிலும் ஏமகிங்கரர்கள்போன்ற வீரர்கள் உருவினகத்தியுடன் வருவதைக்கண்ட பிராமணனுடைய மனம் தலையின்மேலுள்ள ரஜபாத்திரத்தில் குடியேறிவிட்டது. அதைவிட்டு அவன்மனம் அசையவில்லை. கடைசியாகசாயந்திரம் பட்டணமெல்லாம்சுற்றி இருட்டியபிறகு ஜனகராசனிடம் வந்துசேர்ந்தான். அப்போது ஜனகன் பிராமணனைநோக்கி ஐயா, மிதிலைநகரில் இன்றையதினம் நடந்தவிசேஷமென்ன? வென்றார். நான் ஒன்றையும் பார்க்கவில்லை என்று பிராமணன் பதில் சொன்னான். பிராமணனுடைய மனம் ரஜபாத்திரத்திலிருந்ததால் அவனுக்குமற்றவிசேஷங்கள்தெரியவில்லை. அதுபோல் ஜனகனும் தன்மனம் பரமாத்மாவினிடம இருப்பதால் இராஜ்யசுகங்களிருந்தாலும்அவைகளால் தனக்குப் பாதகமுண்டாகவில்லை யென்றார்

மெய்கண்டான், விருதுபட்டி.

சண்டிகேஸ்வரர்

கர்க்க குலத்தில் பிறந்த கணபத்திரன் என்னும் பிராம்மணருக்கு ஒரு ஸமயம் விதர்ப்பதேசத்து ராஜாவான அனமித்திரன் என்பவன் யாகம் செய்தபோது ஏராளமான பசுக்களை தானம் கொடுத்தான். அதுகளையும் அந்த ஊரில் உள்ள மற்றைய பசுமாடுகளையும் வழக்கப்படி இந்த பிராம்மணர் தன் ஊரின் சமீபத்தில் உள்ள தோப்பில் மேய்த்து வரும்படி தன் சிஷ்யர்களை அனுப்புவது வழக்கம். இப்படியாக இருக்கையில் இந்த பிராம்மணருடைய புத்திரனாகிய சண்டன் என்பவன் அந்த ஸமயம் பிரம்மசாரியாக இருந்தவன். தான் சாஸ்திரங்களை நன்றாய் அறிந்து கொண்டபடி பசு தேவதையின் ஸ்வரூபமாகையாலும் அதை சம்ரக்ஷிப்பது சிவதர்மம் என்று தானும் தினந்தோறும் அந்த பசுக்களுடன் தோப்பிற்குச் சென்று அவைகளை மேய்த்து வந்தான். இவனுடைய விசேஷ பக்தியினால் இவனைக் கண்டவுடனேயும் அதுகளுக்கு ஏராளமாய் பால் சுரக்க ஆரம்பித்தன. இப்படியாக விருக்க இவைகளின் பால் ஈஸ்வரனுக் கல்லவோ பிரயோஜனப்பட வேண்டுமென்று இந்த சிறு சண்டன் தினம்தோறும் சாயங்காலங்களில் அந்த பசுக்களின் பாலைக்கரந்து அவ்விடத்தில் தோப்பில் ஆற்றின் கரையில் மணலால் சிவலிங்கத்தை உண்டுபண்ணி பாலைக்கறந்து அதற்கு அபிஷேகம் செய்து ஆநந்தமடைவது வழக்கம். இப்படி செய்து பிறகு மாடுகளை வீட்டிற்கு ஓட்டிப்போவான்.

சாயங்கால வேளையில் பாலைக்கறந்து விடுவதினால் மறுபடியும் ராத்ரியில் வீடுகளில் அதிகமாய் பால் கறவாததைக் கண்டு எல்லோரும் இந்த பிராம்மணனிடம் முறையிட இவர் தன்மகனைக் கேட்டார். சண்டன் தான் நிஜத்தைத் தெரிவித்தால் தன்னை கண்டிப்பதுடன் அந்தப்படி பூஜை செய்வதை தடுத்து விடுவாரென்று வாஸ்தவத்தைச் சொல்லவில்லை. ஆனால் மற்றைய சிஷ்யர்கள் தெரிந்து கொண்டும் இவருக்கு எவ்வளவு படிப்பு இருந்து வித்வானாயிருந்தும் நிஜபக்தி இல்லாததின் நிமித்தியம் இப்படித் தன் குழந்தை செய்வதில் கோபம் உண்டாச்சுது.

தன் மகன் செய்யும் வாஸ்தவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டி ஒருநாள்தான் தோப்பினிடம்போய் ஒருமரத்தின்பேரில் ஏறி ஒளிந்து கொண்டிருந்தார். இப்படி தன் மகன் செய்வதைக் கண்டு கோபமடைந்து கீழே இரங்கி சண்டனை அடித்து மணலால்செய்து அவன் ஸ்தோத்திரம் செய்யும் லிங்கத்தைக் காலால் உதைத்தார். உடனே சண்டர் வெகு கோபமடைந்து சமீபத்திலிருந்த கோடரியால் தன் தகப்பன் கால்கள் இரண்டையும் வெட்டி அவை துடிப்பதைக்கூட கவனியாமல் அந்

தக் கோபத்திலும் பக்தியுடன்ஈஸ்வரனை பிரார்த்தித்துக்கொண் டிருந்தார், உடனே பகவான் அவ்விடத்தில் ஆவிர்பவித்து இவ ரை சண்டிகேசன் என்று பெருமையுடன் கொண்டாடி இவர் பிதாவைக் கொன்றதற்குக் காரணம் தன்னிடமிருந்தபக்திஆன தினால் இப்படியாக பெரும்பாவங்களை செய்பவர்களுக்குக்கூட அதை ஈஸ்வர பக்தியுடன் செய்பவர்களுக்கு இவரைசாக்ஷியாக ஏற்படுத்தி இவரை பக்தர்களுக்குள் முக்கியமாகவும், தன்னை கோயிலில் தெரிசிப்போர் இவரையும் தெரிசிக்கவும் அப்படி தெரிசிப்பவர்களுக்கு இவர் மூலமாய் பலன் அளிப்பதாகவும் கடாக்ஷித்து இவருக்கு திரிநேத்திரம் சதுர்புஜம் சர்ப்பாபர ணம், வியாக்ரசர்மம், நீலகண்டம் இதுகளையும் ஏற்படுத்தி தன க்கு சமீபத்தில் கோயிலையும் மணி முடிமாலை இதுகளையும் கொ டுத்து பட்டாபிஷேகம்செய்து வைத்தார். ஆனது பற்றியேஇப் பொழுதும் சிவன்கோயில் தெரிசனத்துக்குப் போவோர் எல் லோரும் கர்ப்பகிருகத்திற்குவடபுரம்சமீபத்தில் கோடரிசகிதம் இருக்கும் சண்டிகேஸ்வரரை கட்டாயம் தெரிசித்து வருகிறார் கள்! இப்படி இவரை தெரிசிக்கா விட்டால் ஈஸ்வர தெரிசனம் பூர்த்தி ஆனதாக மாட்டாது. மேலும் மகா யோகியாய் தகப் பனாரிடம் கோபத்தில்கூட தன்னிடம் பக்தி விஸ்வாஸத்தை உடையவராயிருந்த பெருமையால் பகவான் தன்னை பூஜிப்பவர் களுக்குதான் பலன் கொடுப்பதுபோல் தன்னை உபாஸிப்ப வர்களுக்கும்இவர்கொடுக்குமாறுசக்தியையும் அநுக்கிரகித்தார்.

சண்டிகேஸ்வரருக்கு சந்நிதி ஒவ்வொரு சிவன் கோயிலிலு ம் அநேகமாய் ஏற்பட்டிருந்தாலும் இவர் பிறந்த இடம் ஆடுது றை சமீபத்திலிருக்கும் திருச்சேய்ஞலூர். இவருக்கு ஈஸ்வரன் பிரத்தியக்ஷமாய் மோக்ஷம் அளித்தது அதன் சமீபத்திலிருக் கும் திருவாப்பாடி.

இவர் பெருமை தன்பக்தி விசேஷத்தினால் மஹாயோகியா யிருந்தும் தன் தகப்பனாரை கோடரியால் வெட்டினதால் கோ டரியை தோளில் எப்பொழுதும் உடைத்தாயிருக்கும் சிலையு டன் தெரிசிக்கப்படுகிறார்.

மேல் சொன்ன சரித்திரத்தை விவரித்துக்காட்டி கெங்கை கொண்ட சோழபுரம் என்னும் க்ஷேத்ரத்தில் சண்டிகேஸ்வரன் கோயில் சமீபத்தில் சுவாமி வெளிப்பிராகார மதிலில் சிலை ஏற் பட்டிருக்கிறது. இது வெகு அருமையாய் இருப்பதுடனும்ஈஸ் வரன் இவருக்கு தன் மாலையை சிரசில் சாத்தி அனுக்கிரகித்த மாதிரி வெகு நன்றாய் அமைந்திருப்பது எல்லோரும் பார்க்கத் தக்கது.

P. V. ஜகதீசய்யர்.

நமது மதம்

சதுர்வித புருஷார்த்த சித்தியே நமது மதத்தினுடைய நோக்கமாகும். தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் நான்கும் நாம் அடையவேண்டியனவே. தர்மஸேவை செய்து, பொருள் சம்பாதித்து இன்பம் நுகர்ந்து மோட்சாநுபூதியடையவேண்டியதே நமது வாழ்நாட்களின் பயனாகும். உலகத்தில் பலவித பரோபகார தர்ம கார்யங்கள்செய்து புகழ்பெற வேண்டும், உலக சுகங்களில் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் அநுபவிக்க வேண்டும்.இவற்றுடன் மோட்சமும் அடையவேண்டும் ஆ! ஆ! என்ன கம்பீரமான நோக்கம்! "இப்புருஷார்த்தங்களை மனிதன் எப்படி யடைகிறது"? என்று ஒருகேள்வி. "புருஷப் பிரயத்தனத்தினால், ஆண்மையினால்" என்று நமது மதம் கோஷிக்கின்றது. நமது மதத்தில் கெஞ்சுதல் இல்லை; வேண்டிக்கொள்ளுதல் இல்லை. நமதுவிடா முயற்சியினால், நமது அஞ்சா நெஞ்சத்தின் ஆண்மையினால் நாம் கார்யசித்தி பெறவேண்டும்.ஏனென்றால். நம்முடைய தல்லாத—இயற்கையிலேயே நமக்கு உரியதாயில்லாத ஒன்றையும் நாம் அடைவதில்லை. நமது மதத்தில் தீமையில்லை. நாம் தீங்குகள் அறியோம். பிறர்க்குத் துன்பமுண்டாகும்படியான செய்கைகள் செய்வதற்கு நமது மதத்தில் இடமில்லை. ஆனால் காக்கையும் கண்டு காதைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு போகும்படி அவ்வளவு ஏமாந்தவர்களாகவும் இருக்கும்படி நமது மதம் சொல்கின்றதில்லை; நாம் ஒருவருக்கும் தீங்கு செய்யக்கூடா தென்றுதான் சொல்கிறது.

எப்பொழுதும் வேலைசெய்; இடைவிடாமல் வேலைசெய்; கலப்பையெடுத்து உழுதலும் பிரஹ்மநிஷ்டையே, கையில்வாளெடுத்து யுத்தம் செய்தலும் பிரஹ்ம நிஷ்டையே. நாம் யாதுசெய்தாலும் அது பிரஹ்ம நிஷ்டையே. உலகப் பொருள்களை நாம் ராஜபோகம்போல அநுபவிக்க வேண்டும், தொழில்களில் தேர்ச்சி பெறவேண்டும். வியாபாரத்தில் முதன்மை பெறவேண்டும். அரசுரிமைகளனைத்தையும் அடைந்து கொள்ளவேண்டும். உலகுமுழுதினுக்கும் நாம் உபதேசிக்க வேண்டும். நமது கீர்த்தி ஜ்வலிக்கவேண்டும். ஆகையால் நாம் இடை விடாமல் வேலைசெய்யவேண்டும். ஆனால் யோகிகளாய் நின்று வேலைசெய்ய வேண்டும்; பலனில் பற்றற்று வேலைசெய்ய வேண்டும்: பலனில் பற்று விழுந்த பொழுது, நமது மனமானது பலனிடத்தில் செல்கின்றதே யொழிய, அப்பலனை யடைவதற்குள்ள வேலையினிடத்து

ச்செல்வதில்லை. ஆதலால் நாம் நினைத்தபலன் நமக்கு வாய்க்கின்றதில்லை. ஆதலால் பற்றற்று வேலைசெய்; "எத்தொழிலைச்செய்தாலும் ஏதவத்தை பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்றார் பட்டினத்தார். அதுபோல நாம் அனைவரும்முத்தர்களாய் முன்னின்று சகல தொழில்களையும் செய்வோம்; எல்லாப் பொருள்களிலும் இன்பத்தை யனுபவிப்போம். வெறுப்பு என்பது நம்மிடத்தில் இல்லை; விட்டு விடுதல் என்பது நம்மிடத்திலில்லை; பாபமும் பயமும் நம்மிடத்தில் கனவிலும் இல்லை.

* * * *

இல்லை, முடியாது என்ற இரண்டு பதங்களும் நமது மதத்தில் இல்லை. இவ்விரண்டு பதங்களையும் பெண் தன்மையுமற்ற பேடிகள் கையாளட்டும; இவ்விரண்டு பதங்களையும் பயங்காளிகள் கையாளட்டும். உலகு முழுதும் நாமே நிறைந்துள்ளோம். உலகு முழுதும் எமக்கே யுரியது என்று நாம் பெருமை பாராட்டுகின்றோம். நமது மதமானது இத்தகைய கம்பீரமான மதம் இந்த மதம் தான் இப்பொழுது நம் தேசத்தைப் பிடித்திருக்கும் பீடையை நிவர்த்தி செய்வதற்கு அநுகூலமானது. இந்த மதம் தான் உலகு முழுதும் பரவி, உலகினர் அனைவரையும்உய்விக்கப் போகின்றது. இந்த மதம் தான் "இரண்டற்ற வஸ்து ஒன்று உள்ளது; அது நான் தான்" என்று நிர்ப்பயமாக திக்குகள் செவிடு படும்படி உபநிஷத்துக்களின் மூலமாக கோஷிக்கின்றது. —ஞானபாநு, சென்னை.

கடுதாசியால் ஒரு கட்டிடம்:—பாரிஸ் பட்டணத்தில் 60,000-ரூபாய் செலவழித்து கெட்டியான கடுதாசியினால் ஒருபெரிய கட்டிடம் கட்டியிருக்கிறார்களாம்.

ஒரு விநோத மீன்:—அமெரிக்காவிலுள்ள ந்யூயார்க்கின் ம்யூஸியத்தில் ஒரு விநோதமான மீன் இருக்கிறது. அது ஆறு மாஸ காலம் ஜலத்திற்குள்ளிராமல் ஜலத்துக்கு வெளியிலே வஸித்து வந்திருக்கிறதாம்.

மனிதர்கள் ஏரையிழுத்தல்:—சீனாவில் சில இடங்களில் நிலத்தை உழ மனிதர்கள் மாட்டுக்குப் பதிலாக ஏரை இழுக்கிறார்களாம். ஒரு ஏரை இரண்டுபேர் சேர்ந்து இழுப்பார்களாம். அவர்கள் உழும் படைச்சால் 6-அங்குலம் அகல முள்ளதாம். ஒரு ஏக்கர் உழ நிலத்தின் நெடுக 400-தடவை கலப்பையை இழுத்துச் செல்வார்களாம்.

கண்ணாடி சாமான்கள்

கண்ணாடி சாமான்கள் செய்யும் விதத்தைப் பற்றியும், அவற்றின் குணகுணங்களைப் பற்றியும், மிஸ்டர் சி.எஸ். அனந்த பத்மநாபராவ், எம்-ஏ-எல்-டி. 'பிழைக்கும் வழி' ப்பத்திரிகையில் ஓர் சிறந்த வியாஸமெழுதி யுள்ளார். அது பின் வருமாறு:—

கண்ணாடியால் செய்த அனேக சாமான்களும் ஆபரணங்களும் பழக்கத்தில் இருக்கின்றன. பல உருவங்கள் அமைந்த விளக்குச் சிம்னிகளும் அனேக வர்ணங்களுடன்கூடிய ரஸகுண்டுகளும், உள்ளே வர்ணக்கோடுகளையுடைய விசித்ரமான கோலிக் குண்டுகளும், உள்ளே வெண்மையான முலாம் பூசப் பெற்ற பமபாய் முத்துக்களும், பெண்டுகள் ஸாதாரணமாய் அணியும் முறுக்கு வளையல்களும், வகை வகையான விநோத பம்பாய் வளையல்களும் கண்ணாடியால் செய்யப்பட்டவைகளே. வெயிற்காலத்தில் கண்கூசாமல் இருக்க உபயோகிக்கும் புகை வர்ணமான கண்ணாடிபில்லைகளும், வயது முதிர்ந்தவர்களுடைய நேத்ரங்களின் ஊனங்களைப்போக்குவதற்காக உபயோகிக்கும் தெளிவான மூக்குக்கண்ணாடிபில்லைகளும்கண்ணாடியால் ஆக்கப் பட்டவைகளே. ஜனங்களுக்கு மிகவும் உபயோகமான அநேகவித தட்டுமுட்டுசாமான்களும் கண்ணாடியால் செய்யப்படுகின்றன.

இந்த சாமான்களெல்லாம் பெரும்பாலும் அன்னிய தேசத்திலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன. இந்தியாவில் இக்காலத்திலும் செய்யப்படும் கண்ணாடி ஸாமான்கள் ஸ்வல்பமே. தென்னிந்தியாவில் சித்தூர்ஜில்லாவில் திருப்பதிக்கு அடுத்த சிலகிராமங்களில் அனேக தலைமுறையாக வளையல்களுக்கு உபயோகமான ஒருவித மட்டமான நீலக்கண்ணாடியைச்செய்து வருகிறார்கள். வட இந்தியாவில் வர வர விலையுயர்ந்த கண்ணாடி சாமான்களும் செய்ய ஒரு கைத்தொழிற்சாலை (ஆனால் இப்போது அதுவேலைசெய்ய வில்லை.) ஏற்பாடாகி வேலை நடந்துவருகிறது.

கண்ணாடியின் குணங்கள்.

கண்ணாடியின் முக்கிய குணம் அதன் வழியாக ஒளியை ஊடுருவச் செய்வதே. ஒரு கண்ணாடித் துண்டை நமது கண்ணுக்கு முன்பிடித்தால், அதன் வழியாய் எதிரிலுள்ள வஸ்துக்களைப் பார்க்கலாம். பீங்கான் ஓட்டையாவது உலோகத் தகட்டையாவது இம்மாதிரி பிடித்தால், முன் தென்பட்டவை யெல்லாம் மறைந்துபோகு மல்லவா? உள்ளே வைத்த மருந்து முதலான ஸாமான்கள் கண்ணு[illegible]த் தென்படும் பொருட்டே கண்ணாடி ஜாடிகளையும் வீஸாக்[illegible]ம் உபயோகிக்கிறோம். கண்ணாடி ஜலத்தில் கரைந்து போவதில்லை. புளிப்பு பதார்த்தங்கள் வைத்தால், பதார்த்தங்கள் கசிப்போவதில்லை. பாத்திரத்திலும்

களிம்பேறுவ தில்லை. கடினபதார்த்த மாகையாலும், சுளுவில் கீறமுடியா தாகையாலும், அதன் மெருகு சீக்கிரம் அழிவதும் இல்லை. அது விலையிலும் ஸரஸம். உருக்கி வார்க்க முடியுமாதலால், அனேகவித வர்ணங்களுடனும் நானாவிதமான உருவங்களுடனும் கண்ணாடியை வார்த் சாமான்கள் செய்யலாம். வீட்டுக் கூரைகளில் உபயோகிக் கண்ணாடி ஓடுகளும், மேஜைகளின் மேல் அலங்காரத்திற்கா , காற்றடித்துக் காகிதங்கள் பறந்து போகாமல் இருப்பதற்காகவும் நாம் உபயோகிக்கும் கண்ணாடிக் கற்களும் இவ்வாறு வார்க்கப் பட்டவைகளே. மேற்கூறிய குணங்களுக்காக கண்ணாடி சாமான்கள் பலவிதமாய் வீடுகளில் உபயோகப் படுகின்றன.

கண்ணாடியின் குற்றங்கள்.

ஆனால், கண்ணாடி கடின பாதார்த்த மானாலும், கீழேவிழுந்தால் எளிதில் உடையும் தன்மையுடைய தாதலால், கண்ணாடி ஸாமான்களை அதிக ஜாக்ரதையுடன் உபயோகப்படுத்தவேண்டும். உடைந்த பாத்திரத்தின் சிறு துண்டுகள் உறுதியுடையனவாதலாலும், கூர்மையான ஓரங்களுடன் இருப்பதாலும் கைகால்களில் எளிதில் குத்திக்கொள்ளும். இவ்வாறு பட்டுக்கொண்ட துணுக்கை எடுத்து விடுவது கஷ்டமாகும். ஏனெனில், நிறமற்றவையாதலின் கண்ணுக்கு எளிதில்தெரிவதில்லை. அனேகஸமயங்களில் வலியிருப்பதைக் கொண்டு தான் கண்ணாடிதைத்தஇடத்தைக் கண்டுகொள்ள வேண்டும். அதைப்பிடித்திழுக்கும்போதே உடைந்துபோனாலும்போகும். மேலும் அஜாக்ரதையாய் நாம் கண்ணாடி தைத்த இடத்தை அமிழ்த்தினால் அத்துண்டு மேன் மேலும் சதையைக் கிழித்துக் கொண்டு உள்ளேயே செல்லும்.

கண்ணாடிப் பாத்திரங்கள் வெடிப்பதேன்?

கண்ணாடி சூட்டை இழுத்துக்கொண்டு பரவச் செய்யும் குணமுடைய தல்ல வாதலாலும், சூடான பாகம் மற்றெல்லா வஸ்துக்களைப்போல் விரியு மாதலாலும், கண்ணாடிப் பாத்திரத்தை அடுப்பின்மேல் வைத்தால், சூடுகண்ட கீழ்பாகம் விரிய, மேல்பாகம் சூடாகாமலும் விரியாமலும் இருக்கும் இதேமாதிரி சூடான ஜலம், பால், காபி முதலானவற்றைக் கண்ணாடி டம்ளரில் ஊற்ற, உட்பாகம் விரிய வெளிப்பக்கம் சுடாமல் விரியாமல் இருக்கும், களி மண்ணில் ஒருபாகம் வெயிலில் காய்ந்து சிறுக்க மற்றப்பாகம் முன்மாதிரி இருக்குமானால், காய்ந்துசுருங்கிய பாகம் பாளம் பாளமாக வெடித்துப்போவது போல், ஒருபக்கம் மாத்திரம் விரிந்த பாத்திரம் வெடித்து உடைந்து போகிறது. சூடா யிருக்கப்பட்ட கண்ணாடி சிம்னியில் குளிர்ந்த காற்றுப்பட்ட போதாவது, ஸாதாரண டம்ளர்களில் பனிக்கட்டியைப் போட்ட போதாவது, அவைவெடித்துப்போவது இக்காரணத்தாலேயே. ஆனால் இவைகளுக்கு மெல்லிய பக்கங்க

ளையுடைய டம்ளர்களை உபயோகித்தால் இக்கேடு உண்டாவது இல்லை. ஐஸ்டம்ளர்என்று விற்பவைகளெல்லாம் மெல்லியனவாக வேஇருக்கும். சிம்ணிவாங்குகையில் மெல்லியவைகளும் எங்கும் ஒரேசீராய்ப்பருமனுள்ளவைகளைதெரிந்தெடுத்தால், அவைசீக்கிரம்உடைந்துபோகா சுடவைப்பதற்காகஉபயோகிக்கும்கண்ணுடிக் குப்பிகளும் டம்ளர்களும்இம்மாதிரியே இருக்கவேண்டும்.

கண்ணுடி செய்யும்விதம்.

தெளிவான மண் ஸம்பந்த மில்லாத மணலையும் ஸோடா உப்பையும் சுண்ணும்பு நீறையும் ஒரு தாமாஷாவின்படி சேர்ந்து நன்ருய்ப் பொடிசெய்து கொஞ்சம் கரித்தூளுடன் கலந்து அதிக தீக்ஷணத்துடன் தீபரவிய அடுப்பில் இட்டு 10-12-மணி நேரம் காய்ச்ச, பொடி யெல்லாம் உருகி நன்ருய் ஒன்ரேடொன்று கலந்து கெட்டியான தேன்பாகு போன்ற பக்குவமுள்ள த்ரவப் பொருளாகிறது. இக்குழம்பை அப்பக்குவத்திலேயே வைத்துக் கொண்டு நீண்ட இரும்புக் குழாய்களின் ஒரங்களில் கொஞ்சங் கொஞ்சமாய் வேண்டிய அளவு எடுத்து மற்ருெரு நுனியால் ஊத, உருண்டையான வீஸாக்கள் செய்யலாம். இதையே அச்சில் வைத்து ஊத, ஸோடா வாடர் புட்டிகளாகவும் மருந்து வீஸாக்களாகவும், வேண்டிய உருவத்துடன் செய்யலாம் அச்சிலேயே தகுந்த எழுத்துகளுக்கு இடம் விட்டிருந்தால், வீஸாவில் அவ்வெழுத்துகள் பதித்ததுபோல் தென்படும். இக்குழம்பை நீண்ட கரண்டிகளில் எடுத்து அச்சுகளில் வார்த்து அமிழ்த்த கண்ணுடி ஒடுகள் உண்டாகும். இந்த ஸாமான்கள் செய்தவுடன் வெளியில் வைத்திருந்தால், காற்றுப் பட்டுக் குளிர்ந்து போகும்போது, உட்புறத்தைவிட மேல் தட்டுகள் அதிக சீக்கிரம் குளிர்ந்து போவதால், முன்கூறியபடி உடைந்துபோகும். ஆதலால், இவைகளைச் செய்தவுடன் சூடாக்கிவைக்கப்பட்ட அறைகளில் வைத்து மூடி மெதுவாகக் குளிரச்செய்து இரண்டு மூன்று தினங்களுக்குப்பிறகு அவைகளைவெளியே எடுத்து விற்பனைக்குஅடுக்கி வைப்பார்கள். கண்ணுடிசெய்வதற்குச்சேர்த்த மணல் இரும்பு ஸம்பந்தப்படாமல் இருந்ததானல், தெளிவான கண்ணுடிஉண்டாகும். ஸாதாரணமாய்க்கிடைக்கும் மணலில் அதிக மஷ்டுகள் இருப்பதாலும், அதில் இரும்பு மஷ்டு கொஞ்சமேனும் கலந்தே இருக்குமானதாலும், ஸாதாரணக்கண்ணுடி ஸாமான்கள்கொஞ்சம் நீலநிறமுடையனவாயிருக்கின்றன மூக்குக் கண்ணுடி முதலானவைகளுக்கு உபயோகிக்கும் தெளிவான கண்ணுடிகளுக்கு இரும்பு மஷ்டுபோக்கிய மணல்அவசியமாதலால், இப்பளிங்குக் கண்ணுடிகளின் விலை அதிகம் கண்ணுடிசெய்யும்போது தாமர ஸன்னத்தைச் சேர்த்தால், சிவப்பு நிறமுள்ள கண்ணுடி உண்டாகும். மற்றவர்ணங்களுக்கு அவற்றிற்கு ஏற்ற உலோக ஸன்னங்களை உபயோகிக்க வேண்டும்.

இந்திய விவசாயம்

இந்தியர்களில் சுமார் முக்கால்வாசி விவசாயத்தால் தான் ஜீவிப்பதென்பது பிரசித்தம். ஆனால் இக்குடிகளின் நிலைமையோ வெகு பரிதாபமானது. வேடிக்கை விநோதமாய் ஊர் சுற்றிப் பார்க்கவரும் அந்நிய நாட்டாருக்கு இத்தேசத்தின் சீதோஷ்ண நிலைமை தோட்டம், துறவு, ஏரி, வாய்க்கால், கோயில்குளங்கள், பயிர் பாச்சல்கள் வெகு பகட்டாய் காண்பதால் பாலுந் தேனும் கலந்து பாயும் பொன் காய்க்கும் தேசமென்று பொய் அபிப்பிராயப்பட்டுப் போவார்கள். ஆங்காங்கு கிராமங்களில் குடியானவர்களுடன் கூடிப் பழகினால் அவர்கள் படும் கஷ்ட நஷ்டங்கள் நன்கு வெளிப்படும். இந்நாட்டில் கைத்தொழில்கள் அனேகமாய் கிடையாது. உள்ள சில கைத்தொழில்களும் தற்காலம் சாஸ்திர முறையாய் செய்யப்படுவனவல்ல. கவர்ன்மெண்டாரும், மற்ற ஜெர்மனி, ஜப்பான் தேசங்களைப்போல், கைத்தொழில் விருத்திக்கு வேண்டிய சகாயம் செய்வதாயில்லை. இப்படி கவர்ன்மெண்டார் நாட்டின் கைத்தொழில் வர்த்தகத்தில் நாம் பிரவேசிக்கக் கூடாதென்று எட்ட இருக்கிறவரையில் இது விருத்தியாவதற்கு வழியில்லை. இப்படியிருக்க இந்நாட்டுக் குடிகளுக்கு விவசாயமே முக்கிய சீவனோபாயமாகும். மேழிச் செல்வம் கோழைபடாது என்பதுபோல் பூமி செழித்து நல்ல பலனைக் கொடுக்குமானால் விவசாயத்தாலேயே நாட்டின் செல்வம் அதிகரிக்கலாம். அமெரிக்கா, கனடா, ஆஸ்டிரேலியா, நியூஜிலாந்து முதலிய தேசங்கள் விவசாயத்தாலும் முன்னேற்றமடைந்திருக்கின்றன, அவ்விடத்தில் தற்கால சாஸ்திர முறைப்படியான விவசாயத்தால் பூமி வெகு அதிக பலனைக் கொடுக்கின்றது. இந்தியாவிலோ விளைவு வெகு கொஞ்சம். இதற்கு காரணம் முக்கியமாய் இவ்விடத்திய சீதோஷ்ண நிலைமையாகும். விவசாயத்துக்கு முக்கியமாய் தண்ணீர் வேண்டியது. இந்தியாவில் சில மாதங்கள் பலத்தமழை பெய்தாலும் அனேகமாய் மழை வெகு கொஞ்சமாயும் காலத்தில் பெய்யாமலும் போவதால் பயிர்கள் நஷ்டமாய் பஞ்சகஷ்டமும் உண்டாகின்றது. கவர்ன்மெண்டார் சில பெரிய நீர்பாச்சல் வேலைகளைச் செய்திருக்கிறார்களாயினும் இவை வெகுகொஞ்சமாகும். எத்தனையோ லட்சக்கணக்கான குடிகள் இவற்றின் பலனை அடைய முடியாதிருக்கிறார்கள் ஆகையால் இந்நாட்டின் விவசாயத்தை விருத்தி

செய்ய வேண்டுமானால் முதலில் நீர்ப்பாச்சலுக்கு வேண்டிய அனுகூலங்கள் செய்யவேண்டும். இதற்குகவர்ன்மெண்டின்சகாயம் வெகு முக்கியமாகும். இப்போதிருக்கும் ஏரி வாய்க்கால்களை துரஸ்து செய்து பெரிதாக்கவோ புதியவைகளை உண்டாக்கவோ, கிணறுகளை வெட்டி பம்பு எந்திரங்களை ஸ்தாபிக்கவோ கவர்ன்மெண்டுதான் முன் வரவேண்டும். குடித்தனக்காரர்கள் தனித்தனியாய் இவைகளைச் செய்ய முடியாது. அவர்கள் சங்கமாய் ஒன்றுகூடி செய்யவும் தற்காலம் முடியாது. இப்படிப்பட்ட சங்க உணர்ச்சி இவர்களுக்குள் பரவ இன்னும் பல வருஷங்கள் செல்லும். இச்சந்தர்ப்பத்தில் கவர்ன்மெண்டே முன்வந்து இவைகளைச் செய்வது கடமையாகும். வேண்டுமானால் இவைகளுக்குப் பிடிக்கும் பணத்தை பூர்த்தியாகவோ ஒரு பாகமோ ஜனங்களிடத்தி லிருந்து காலக்கிரமத்தில் வசூல் செய்யலாம்.

இப்படி இந்திய விவசாயிக்கு முதலில் தண்ணீர் வேண்டியது. இரண்டாவது ஞானம் அல்லது பிடிப்புவேண்டும். தான் செய்யும் விவசாயத்தை எப்படி விருத்தி செய்யலாம் என்று அவன் அறிய வேண்டும். இப்போது அவன் குருட்டுத்தனமாய் செய்துவரும் புராதன முறையை விட்டு சாஸ்திர முறையான புதிது புதிதான தேககஷ்ட நிவர்த்திசெய்யும் எந்திரங்களையும், எருக்களையும் நல்ல விரைகளையும் உபயோகிக்கவேண்டும் இவற்றின் அனுகூலங்களையும் நற்பலன்களையும் செய்து காட்டினால் குடிகள் அவைகளை சாக்கிரதையாய் பின்பற்றுவார்கள். தேசபாஷைகளில் இவ்விஷயங்களை துண்டு பத்திரிகையில் பிரசுரம் செய்து தாராளமாய் கொடுக்கவேண்டும் ஆங்காங்கு உபந்நியாசங்கள் செய்யவேண்டும். விவசாயபொருட்காட்சிகள் கிராமாதிகளில் ஏற்படுத்தவேண்டும். குடிகளின் நிலங்களுக்கு அடுத்தாப்போல் பண்ணைகள் ஏற்படுத்தி தாங்கள் போதிப்பதுபோல் பயிரிட்டும் காட்டவேண்டும். பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் படித்து முடிந்ததும் எவ்வளவு தாழ்ந்ததாயினும் கவர்ன்மெண்டு உத்தியோகங்களுக்கே அலையாமல் தங்கள் குடும்பத் தொழிலாகிய விவசாயத்தையே கையாளத் தகுந்த விவசாயப் படிப்பைச் சொல்லிவைக்க வேண்டும். கவர்ன்மெண்டார் இவைகளையெல்லாம் ஒருவாறு இப்போது செய்து வருகிறார்களாயினும் இவை போதாது. பண்ணைகள் இன்னும் அதிகமாய் குடிகளின் நிலங்களுக்கு அக்கம் பக்கத்திலேயே ஏற்படுத்தி பயிரிட்டு உழைப்பு

சகாயத்தையும் பலம் அதிகத்தையும் காட்டவேண்டும். இப்படி அவர்கள் பலாபலத்தை நேரில் கண்டு தெளிந்தால் எதையும் கைப்பற்ற பின்வாங்கார்கள். பள்ளிக்கூடங்களில் விவசாயப் படிப்பு முறையும் சீர்திருத்தப் படவேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கும் விவசாய காலேஜ்கள் அவ்வளவாக நன்மை பயப்பதாயில்லை. இவைகளில் படிப்பவர்கள் வெகு சிலர். இவைகளிற் சேருவதற்கு ஏற்படுத்தியிருக்கும் பொதுப் படிப்போ அதிகம். அங்கு சொல்லிவைக்கும் படிப்பு எல்லாம் இங்கிலீஷ்பாஷையில்தான். இவைகளில் படித்து தேறியவர்கள் கவர்ன்மெண்டு உத்தியோகங்களுக்கு மோப்பம் பிடித்து திரிவதல்லாமல் விவசாயத்தொழிலைச் செய்வதேயில்லை. இப்படியானல் எல்லாம் வீண் எட்டுப்படிப்பாய்த்தான் முடிகிறது. இப்படிக்கல்லாமல் கிராமாதிகளிலே சிறு பள்ளிக்கூடங்களை யேற்படுத்த வேண்டும். அங்கே தேசபாஷைகளிலேயே விவசாயப்படிப்பை அதிகமாய் சொல்லிவைக்கவேண்டும்; கையில் மண்படாத படிப்பைவிட்டு நிலங்களில் நேரே வேலைகளைச் செய்யவைக்கவேண்டும்; தற்காலம் விவசாயம் செய்யும் ஊர் சிறுவர்களும் அப்பள்ளிக்கூடங்களில் ஒழிந்தபோதுவந்துபடிக்கும்படி ஏற்பாடுசெய்யவேண்டும். இப்படி முக்கியமான கிராமங்களிலாவது நூற்றுக்கணக்காய் பள்ளிக்கூடங்களை ஏற்பாடுசெய்து பண்ணைகளில்பக்கத்துக்குப் பக்கம் பயிரிட்டும் காட்டினலொழிய விவசாயம் விருத்தியடையாது. விவசாயப் படிப்பால் பலனடையவேண்டிய குடிகளின் சிறுவர்களும் அப்பலனை யடையார்கள்.

மூன்ருவது பணம்வேண்டியது. பணமில்லாமல் ஒன்றும் செய்யமுடியாது. இரும்புக்கலப்பைகள், எந்திரங்கள் பம்புகள் நல்ல எருவுகள் எது வாங்கவும் பணம் வேண்டும். இந்நாட்டுக் குடிகளுக்கு அனேகமாய் அது கிடையாது இப்போது பயிரிடுங் காலத்தில் பணமில்லாமல் சௌகாரிடத்தில் கடன்வாங்கி அதை தீர்க்க வழியில்லாமல் எவ்வளவோ பேர்கள் முழுகிக் கிடக்கிருர்கள். இப்படி வருஷா வருஷம் கடன்பட்டு க்ஷீணித்துப்போயிருக்கும் குடிகளைக் கையெடுத்து விடுவது கவர்ன்மெண்டின் தர்மமாகும். அவர்கள் சௌகார்களின் வலையில் அகப்பட்டு கஷ்டப்படாத ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஐக்கிய நாணய சங்கங்கள் பல ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருப்பினும் இவையின்னும் பிரபலமடையவில்லை. இவை விசேஷமாகப் பரவி அவற்

றின் பலனை குடிகள் அனுபவிக்கும் வரையில் கவர்ன்மெண்டே வேண்டிய சகாயம் செய்யவேண்டும். விவசாயகடன்களை அதிக மாய் கொடுக்கவேண்டும். அவைகளைப்பற்றிய தற்காலவிதிகள் சற்று கஷ்டத்தை யுண்டு பண்ணுவதாயிருந்தால் இதை விசாரித்து தெரிந்துகொண்டு அவ்விதிகளில் வேண்டிய திருத்தங்களை செய்யவேண்டும். இன்னும் கடனை பணமாய் கொடுப்பதற்கு பதிலாக ஆங்காங்கு விவசாய டிபார்டுமெண்டாரின் மேல் பார்வைக்குட்பட்ட டிபோக்களை ஸ்தாபித்து குடிகளுக்குவேண்டிய விரைதான்யம், எரு, கலப்பைமுதலிய கருவிகளை அவர்களுக்குத் தகுந்த ஜாமீன் பேரில் விற்கலாம் பிறகு மாசூல் காலத்தில் கிரமப்படி கிஸ்து பணத்துடன் இந்த கடனையும் வசூல்செய்யலாம். இதனால் ரிவிநியு அதிகாரிகளுக்கு வேலை சற்று அதிகமாயினும் குடிகளுக் குண்டாகும் நன்மை வெகு பெரிதாகும். இப்படி குடிகளின் க்ஷேமலாபத்தைப் பற்றி கொஞ்சம் கஷ்டப்படுவதும் ராஜதர்மமே யாகும்.

கடைசியாய் குடிகள் எவ்வழியிலும் குணத்தைக்கண்டு தெளிந்தால் அதைக் கைப்பற்ற பின்னடையார்கள். தற்கால சாஸ்திர விவசாய முறையின் நன்மையை அவர்கள் பூர்த்தியாய் அறியாதவர்களல்ல. வேண்டியபடி கையில் காசில்லாததே பெருங்குறை. இக்குறையை நீக்கினால் இந்நாட்டு விவசாயம் வெகு நன்றாய் விருத்தியாகத் தடையிராது. அப்போது விவசாயஇலாகாவின் வேலையும் சுலபமாய் தாங்கள் படும்பாட்டுக்குத் தகுந்த பலன் வெகு சீக்கிரத்திலேயே காணலாம்.

கடைசியாய் குடித்தனக் காரனுக்கு வேண்டியவை மூன்று தண்ணீர், படிப்பு, பணம் இம் முக்குறையும் நீங்கினால் அவன் மற்ற தேசத்தார்களைப்போல் முன்னேற்ற மடையத் தடையில்லை. அப்போது அவன் மேழிச்செல்வம் கோழைபடாது.

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு"

விண்டுநேமி.

சோதிட கலா நிதி

(267-ம் பக்கம் தொடர்ச்சி)

"தஸ்மாதாத்மாந ஆகாஸஸ் சம்பூதஃ, ஆகாஸாத் வாயுஃ, வாயோ ரக்கினிஃ, அக்நேராபஃ, அத்ப்யஃ ப்ருதீவி, தாநிபஞ்ச தந்மாத்ராணிகுணுபவந்தி" எனைபைங்களோப நிஷத்தும், "பாரிடையைந் தாய்ப் பரந்தாய் போற்றி, நீரிடைநான்காய் நிறைந்தாய் போற்றி, தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி, வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி, வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி" என அருநெறித் தமிழ்வேதமும் கூறுமாற்றால், பரமாத்மாவினுடைய இச்சா வசத்தினுல் சதாசிவ தத்துவமே, சப்தகுணமான ஆகாச மாகவும், ஈசுவர தத்துவமே சப்தபரிச குணமுடைய வாயுவாகவும், ருத்திர தத்துவமே சப்தபரிசரூப குணமுடைய வன்னியாகவும், விஷ்ணு தத்துவமே சப்த பரிசரூப ரசகுணமுடைய ஜலமாகவும், பிரம்மதத்துவமே சப்தபரிச ரூபரசகந்தகுணமுடைய பூமியாகவும் மேற்கிரமத்தை யநுசரித்து, ஒன்றிலிருந்து மற்றொன்று ஆவிர்பவித்தது.

அக்நிஷோபாநுசந்த்ரேளத, தஸ்த்வங்காரகாதயஃ
தேஜோபூகாம்புவாதேப்யஃ, க்ரமஸஃ பஞ்சஜஜ்ஞிரே.

என சூரிய சித்தாந்தம் ௧௨ அத்தியாயம் கூறுமாற்றால், அக்கினியிலிருந்து அங்காரகனும், பூமியிலிருந்து புதனும், ஆகாசத்திலிருந்து குருவும், ஜலத்திலிருந்து சுக்கிரனும், வாயுவிலிருந்து சனியும், இப்படி பஞ்சபூதாத்மர்களான பஞ்சதாரா கிரகங்கள் உதித்தார்கள்.

புனர்த்வாதஸதாத்மாநம், பிபேதேராஸிஸம்ஜ்ஞிகம்
நக்ஷத்ரரூபிணம்பூயஃ ஸப்தவிம்ஸாத்மகம்வஸி

என ௧௨ சித்தாந்தங் கூறுமாற்றால், வியாபகனும் சர்வசுதந்தரனுமான, அப்பரமாத்துமா மறுபடியும், சூரிய தேஜஸிலிருந்து பனி ரெண்டாக விபஜித்து, துவாதஸ இராசி ஸ்தானங்களாகவும், மனதினுல் இருபத்தேழு நக்ஷத்திரங்களாகவும், கற்பித்து, பவிருத்தத்தை; அதாவது ஆகாச கக்ஷியா கோளத்தைத் தாபித்தனர். அதனுலேயே சூரியனுக்கு துவாதஸாத்மகன் என்றும், மனதிலிருந்து உற்பவித்த சந்திரனுக்கு உடுபதி என்றும் பெயருண்டாயின. இங்ஙனம் ஏற்பட்ட கிரக நக்ஷத்திரங்கள் எப்படிப்பட்ட தெனின், இவர்களிச் சமிக்ஞைகளையுடைய தேவதைகளெனப்படு கின்றார்கள். தபோதிகர்க ளாத

லால் பரமாத்மாவின் பிரேரணத்தினால், தத்தம் தேஜஸிலிரு ந்து விகிர்மிக்கப்பட்ட கோளங்கட்கு, நியமம் செய்யப்பட்டவர்களாய், உலகோபகாரர்களாக, ஆவர்த்தித் திருக்கின்றார்கள். இவர்கள் கோளங்கட்கும் இவர்களுக்கும் கிரக நக்ஷத்திரங்கள் என, வியவகார நாமங்களுண்டாயின. இதன் குணதர்மங்களே பூகோளத்தில் வியாபித்து பிராரப்த கருமானுசாரமாக, பூமியில் பிறக்கும் ஜீவகோடிகளுக்குச் சுகதுக்கப் பலன்களைச், சகசமாகவுண்டாக்குகின்றன. இதனை இறைவனருளிய வண்ணம், மகாத்துக்களான மகரிஷிகள் உலகோபகாரார்த்தமாக, வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள். இத்தகைய சாஸ்திரத்தை உய்த்துணர்தலினால் எய்தும்பேற்றை, முன்னமே கூறப்பட்டிருப் பினும், ஈண்டும் சிறிது கூறுவாம். பூருவகாலாமிருத சந்திரிகையில் ஜ்யோதிஶ்ஶாஸ்த்ர பரிஶ்ரமாத், ப்ரதமதஸ் சாயுர்பலம் ஜ்ஞாயதே. ஆயுர்ஜ்ஞாந விஶேஷதஸ்ச, நிதராம் ஸத்தர்ம புத்திர்பவேத், தத்தர்மாகத புண்யபாக்ய விபவஸ்சேத், ப்ரஹ்மவித்யாநிதிஸ். தத்விக்ஞானவிஸேஷதஸ்சத், வநுபவே கைவல்யமாப் நோதிஸ:

என்று கூறியதன் மொழி பெயர்ப்புச் செய்யுள்:

மாமறையங்க மாறனுட்சிறந்த மங்களகணிதநூற் றெளிவால்
நாமுறைவாழ்நாள் விளங்குமப்பயனால் நல்லறமதிவரு மதனால்
காமுறுபிரமஞான நற்கல்விகைவரு மதன்பயனாகத்
தோமறுகைவல்லிய நிலையெட்டித்துய்க் கருமின்ப மெய்திடுமே.

ஜோதிஷ பலரத்ன மாலையில்,

கராபதரஸ மாநம்ஸாஸ்த்ரமே தத்விபஸ்சிந்
நியதமபி விலோக்யஸ்ரே யஸேயந்நராணும்
யதிவததித தாநீம்தேவதுல் யோமநுஷ்ய:
பரமஶிவபதஞ்சப் ராப் நுயாதந் யகாலே.

என்று கூறியதன் மொழி பெயர்ப்புச் செய்யுள்:

அங்கையினெல்லிக்கனி யெனவிளக்கு மரும்பெறற்சோதிடநூலைப், பொங்குதெண்டிரைசூழ் பூமிருநிலவைப் பிற்புரையறத் தெளிந்து சத்தியமாய்ச், சங்கையற் றுரைப்போர் தெய்வதுல்லியராய்த் தழைவிரி கடுக்கை வெண்மதியுங், கங்கைசேர் சடையெம்மண்ணலம் மலர்த்தாட் கமனிறன் முடிவி லெய்துவரே.

என கூறியிருப்பது மன்றி "ஏதத்விஜ்ஞான மாத்ரேண ஸ்வர்கலோக: ப்ராப்யதே நரை:" என சோதிட சித்தாந்த சங்கிரகமும் கூறுமாற்றானு முணர்ந்துய்க.

ஜாதக சாராவளியில்,

அர்தார்ஜ நேஸஹாயஃ, புருஷாணுமாபதர்ணவேபோதஃ
யாத்ராஸமயேமந்த்ரீ, ஜாதகமபஹாயநாஸ்த்யபரஃ

என்று கூறியதன் மொழிபெயர்ப்புச் செய்யுள்:

தூயநல்விழியாஞ் சாதகச்சுருதி தோற்றிடுமன்பதைக் கரும்பொன், ஞயநல்குதலிற் சகாயன்போன்ம் மற்றுமாபதக்கடற்கொருபுணைபோன்ம், நேயமார் வெளியாத்திரை யமயத்தினேர் தருமமைச்சனே போலுந், தீயனவகற்றி நன்மையைப் பயக்குஞ் செயலினுலிதற் கிணையெதுவே.

என கூறியிருத்தலினுல் இதன் பயனைத் தெள்ளிதினுய்த் துரைற் பாற்றும் சுபம். சூரியாதி கிரகங்கள் தவிர, ஏனைய சோதிர் கலங்களி யாவுங் கிரகங்களல்ல, ஆனுல் தற்காலத்தில் ஊ ணகசோள சாஸ்திரிகள் எத்தனையோ கிரகங்களைக் கண்டு பிடித்திருக்க, நம்முன்னேர்கள் அவைகளை யெல்லாம் நீக்கி, ஒன்பது கிரகங்களை மட்டு மெடுத்துக் கொண்ட தென்னவென்றல், உலகத்தில் வெவ்வேறு வகைப்பட்ட வர்ணபேத முள்ள கற்கள் பல விருப்பினு மவைகளில், விசேஷித்த நவரத்தினங்களை மாத்திர மெடுத்துக் கொண்டமை போலும், பல வேறு பட்ட வுலோகங்களிருப்பினு மவைகளில், விசேடித்த வைந்து லோகங்களை மட்டு மெடுத்துக் கொண்டமை போலவு முடியுமேயன்றி, ஏனைய கற்களையும் உலோகங்களையு மில்லையென்றும் சூன்னிய மென்றுங் கூறல் இடந்தராமை போன்று, மேலைய கிரகங்க ளில்லியென்று சோதிட சாஸ்திரங் கூறவில்லை. ஆகவே நவக்கிரகங்கள் நீங்கலாக, இதர கிரகங்களுக்கு யாதொரு விசேடமு மில்லை. யென்பதே சோதிட நாற்றுணியாம்.

ஆதலா லவைகள் துருவ மண்டலத்திற்குக் கீழும், சூரிய மண்டலத்திற்கு மேலு முள்ள பிரதேசங்களில், அவைகள் வேறு வேருக சூரியனுல், பிரகாச முண்டாய் விளங்கி விமான கோபுர மண்டப பிரகார நகராதிகளையுடையதாய்இருக்கின்றது அவைகளில் புண்ணிய புருஷர்கள் பரிகர பரிவாரங்களுடன் வர்த்தித் திருக்கின்ருர்கள். அவை அனந்தமா யிருக்கின்றது.

(இன்னும் வரும்)

வித்வான்-வ-கு. வேலு நாயகர்,
பாலசோதிடர், வேலப்பாடி.

இருமல் ரோகம்

(265-வது பக்கத்தொடர்ச்சி)

இதை மேற்படி அளவுபடி தேனில் கலந்து 10-நாள் இரு வேளையும், சாப்பிட்டால் எல்லாப் புண்களும், தோலின் நமைச்சலும், எல்லா வாயுவும், மேகத்தாலுண்டாகும் நமைச்சலும் நீங்கும்.

இதற்குப் பத்தியம், இதில் சொல்லவில்லை. ஆனால், கத்தரிப்பிஞ்சு, மாங்காய், மீன், கருவாடு முதலிய உஷ்ணபதார்த்தங்களை நீக்கி, முருங்கை, அத்தி, கருணை, அவரை, மணத்தக்காளிக்கீரை, பொன்னாங் கண்ணிக்கீரை, ஆட்டுக்கறி, முசல்கறி, காடை, கவுதாரி பசுநெய், பசுமோர், பசுவெண்ணெய் முதலியவை ஆகும்

(பு.பொருள்.) பவழத்துக்கு பிரண்டைச் சாற்றுலரைப்பு நாலு நாலு சாமமும், புளியாரைச் சாற்றுலரைப்பு இரண்டுசாமமும் சொன்னது பிரண்டைச்சாற்றால் இரண்டு தரம் அரைத்து நெருப்பிட்டுத் தீர்ந்ததாகையால் அதுமிகவும் மெலிந்து விட்டபடியால் மூன்றுவதரைப்பு இரண்டு சாமமே போதுமானது சாப்பிடும் நாளளவு சொல்லாதிருந்தும் 10-நாள் சாப்பிடவேண்டுமென்றுசொன்னதுநோய்களின் வன்மையைக் கொண்டேயாம்

இருமல் நோயை எடுத்து அந்நோய் போகும் என்று சொல்லாத பவழ பற்பத்தை இங்கு சொல்லிய தென்னெனின், இருமல் நோய் உண்டாவதற்கு முன் சரீரம் வெப்ப மடைதலும், அவ்வெப்பத்தால், மேக முண்டாதலும், அம்மேகத்தால் உடம்பிளைததலும் வழக்கமாகையால அவ்விருமல் உண்டாவதற்குமுன்வருகிற நோய்களைநீக்கும் என்று சொல்லியிருப்பதாலேயே இருமலும் போகும் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

வேறு பழவபற்பம்.

பாரேநீ பவழபற்பஞ் சொல்லக் கேளு
பாங்கான நற்பவழம் பலந்தான் தூக்கு
நேரேநீ யிலந்தையிலே தனைய ரைத்து
ரெண்டையாய்ப் பிரித்ததின்மேல் பவழம் வைத்து
போரேநீ மேலுமந்த அடையால் மூடிப்
பொருந்தவே சீலைசெய்து முழப்புடத்தில் போட்

டாரேநீ யாறவிட் டெடுத்துப் பாராய்
அப்பனே பவழமெல்லாம் பீங்கானி லிட்டே.

இட்டுமே யாவின்பால் நிறையாய் வார்த்தே
என்மக்காள் ரவியில்வைக்க நீறும்பாரு
திட்டமாம் பவழபற்ப மாருஞ் சொல்லார்
செப்பாதே வெகுசுறுக்குத் தீரும் பாரு
கொட்டாதே பற்பமொரு பணவெடையே தூக்கு
கொம்புத்தே னுவினெய் கூட்டிக் கொள்ளு
தட்டாதே மேகமாங் கிரந்தி சூலை
க்ஷயமீளை யிரைப்பிருமல் நீர்சொரிப்புப் போமே.

1. (மாணாக்கனே! நான் உனக்கு இன்னொரு (3) விதமாகப் பவழநீறு செய்யும் வழியைச் சொல்லுகிறேன். அதை நீ கேட்பாயாக.) அது எப்படி யென்றால்:—உயர்ந்த பவழம் ஒரு பலம் நிறுத்தெடுத்து இலந்தையிலை போதுமான அளவு (அதாவது எட்டுப் பலம்) கிள்ளி அதை நன்றாய்த் தண்ணீர்விடாமல் கெட்டியாய் மெழுகு பதமாக அரைத்தெடுத்து நந்நான்கு பலமிருக்க இரண்டாகப் பிரித்து இரண்டையும் நடுவில் கொஞ்சம் குழிவரும்படி அடை தட்டி; அந்த அடைகளில் ஒன்றின் நடுவிலுள்ள குழியில் மேலே சொல்லப்பட்ட மலின நீங்கின பவழத்தை வைத்து மற்றொரு அடையில் மூடி 3-மண்சீலை செய்து 20-வரட்டி கீழடுக்கி நடுவில் மேற்படி பவழ அடையை வைத்து மேலே 20-வரட்டி அடுக்கி நெருப்பிட்டு அது நன்றாய்க் குளிர்ந்த பிறகு எடுத்துப் பார்த்து அந்த அடையிலுள்ள பவழத்தை ஒரு வெண்மையான பீங்கானிலிட வேண்டும்.

2. அப்படியிட்ட பீங்கானில் அந்தப்பவழம் நிறையும்படி இரண்டுபலம் தனிப்பசும்பால் விட்டுத் தூசுபடியாதபடி வெள்ளிய மெல்லிய துணியை அந்தப்பீங்கான் மேல்கட்டி வெயிலில் வைக்கவேண்டும். அப்படி வைத்தால் அந்தப்பாலானது வற்றிப்போன பிறகு அந்தப்பீங்கானி லுள்ளபவழம் நீறிப்போம். அதை யெடுத்துக்காற்று நுழையாக் குப்பியிலிட்டு மேல்மூடியிட்டு வைத்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட நல்லமுறை பவழநீறு செய்விதத்தை யாவருஞ் சொல்லமாட்டார்கள்.

(இன்னும் வரும்) மா. வடிவேலு முதலியார்,

கௌரீ விஜயம்

நாடகபாத்திரங்கள்.

1. விருபாக்ஷர்—ஓர் சிவபக்தர்; கதாநாயகியின் தந்தை.
2. சாமாதீக்ஷதர்— } மதுரையில் வஸிக்கும் பிராமணர்கள்.
3. கோபால சாஸ்திரிகள்— }
4. விருத்தயோகி—விருபாக்ஷர் வீட்டிற்குவந்த அதிதி.
5. பரமேசுவரன்—கைலாஸ மலையிலுள்ள கடவுள்.
6. அனந்தாசாரி—ஸ்ரீரங்கத்திலுள்ள ஓர் வைஷ்ணவர்; —கதா நாயகன் தந்தை.
7. ராமாநுஜாசாரி—அனந்தாசாரியின் புதல்வன்; கதாநாயகன்.
8. சந்நியாசி— }
9. வாலிபன்— } இவர்கள் பரமசிவனின் மாற்றுருவதாரிகள்.
10. குழந்தை— }
11. மகாதேவன்—விருபாக்ஷரின் நண்பன்.
12. சுபவிரதை—விருபாக்ஷரின் மனைவி; கதாநாயகியின் தாய்.
13. கௌரீ—விருபாக்ஷரின் புதல்வி; கதாநாயகி.
14. பார்வதி—பரமசிவனுடைய மனைவி.
15. திருமங்கை—அனந்தாசாரியின் மனைவி; ராமாநுஜாசாரி—யின் தாய்.
16. சுந்தரி— }
17. ஜானகி— } மதுரையிலுள்ள சிலஸ்திரீகள்.
18. லக்ஷ்மி— }

நாடகம் நிகழுமிடம்.

மதுரையம்பதியிலும், தபோவனத்திலும், ஸ்ரீரங்கத்திலும் சிறுபான்மை கைலாஸபர்வதத்திலுமாம்.

முதல் அங்கம்.

காட்சி-1. இடம்; மதுரையம்பதியிலுள்ள ஓர்மடம்.

(சாமாதீக்ஷிதரும் கோபாலசாஸ்திரிகளும் பிரவேசிக்கின்றனர்.)

சாமா:—எங்காணும் சாஸ்திரிகளே! எங்கே, இப்படி சாவகாசமாக வந்திருக்கிறீர்கள்? இன்று சாப்பாடு வலுவோ? பிறர் வீட்டில் வயிறு புடைக்கப் புசிப்பதும் மடத்தில் வந்து புரளுவதும் தான் வேலையோ உமக்கு?

கோபா:—ஓய்-தீக்ஷிதரே! உமது சங்கதி யெப்படி? உமக்குப் பிள்ளை குட்டி ஒன்றும் இல்லாமலிருக்கும் பொழுதே, எங்கேபூரி, எங்கே திவசம், எங்கே சமாராதனை யென்று ஊரூராகப்போய் அலைய வில்லையா நீர்? பெய்கிற மழையும் காய்கிற வெய்யிலும் உமக்குத்தானே? பிறர்குற்றங்களைப்பார்க்கும்கண்களுக்குத்தமது குற்றம் தெரியவராதென்பது உண்மைதான். யோசித்துப்பேசும். வார்த்தைகளைக்கொட்டி வம்பளக்கவேண்டாம்.

சாமா:—சாஸ்திரிகளே! தவறிப்போய் சொல்லிவிட்டேன். கோபித்துக் கொள்ளாதேயும். இம்மதுரைமா நகரத்தின் காட்சியைப் பார்க்கும்பொழுது துறவிகளுக்கும் தங்களை யறியாமலே இதில் பற்று உண்டாகுமென்று தோன்றுகிறது. தமிழ்ப் பாஷையின் பிறப்பு வளர்ப்புக்குக் காரணமான முதல், இடை, கடைச்சங்கங்களால் விளங்கப்பெற்றதாயும், மலைமகள் மணாளன் பிட்டுக்கு மண்சுமந்து அஞ்ஞான அந்தகாரத்தில் ஆழ்ந்து கிடந்த பாமரஜனங்களின் பாச பந்தங்களை நீக்கியருளிய ஸ்தலமாயும், பாண்டிய மன்னர்களை அவ்வப்பொழுது ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றிய அங்கயற் கண்ணியம்மை தன் நாதன் சுந்தரேசுவரரோடு கூடிப்பிரகாசிக்கின்றதாயு முள்ள இம்மதுரைமா நகரத்தைக் கண்ணுற்றதும் இதில் சொற்பகாலமாவது வசிக்க விரும்பாதவரும் உண்டோ?

கோபா:—ஆமாம், தீக்ஷிதரே! நீர் கூறியபடியே இந்நகரின் வளப்பங்கள் செழிப்பாகவே இருக்கின்றன. இவ்வைகை யாறானது, இம்மதுரையம் பதியை நோக்கி வருவது நுட்பமான இடையையுடைய ஓர் யௌவன ஸ்திரீ, தான் காதலித்த புருஷனைக்கண்டு நமஸ்காரம் செய்வதுபோலிருக்கிறது. இவ்வாற்றின் கரையில் தென்னை, மா, பலா, சொங்கு, பாதிரி, கொன்னை, வில்வம், மந்தாரை முதலிய வானமளாவிய விருக்ஷங்களும் ரோஜா, மல்லிகை, நந்தியாவட்டை, சண்பகம், இருவாட்சி முதலிய பூச்செடிகளும் நிறைந்து ரமணீயமாகக் காணப்படுகின்றன. ! அன்றியும் இம்மதுரையம்பதியில் பலதபோவனங்கள் இருக்கின்றன இங்குவஸிப்பவர்கள் யாவரும் எப்பொழுதும் பகவானையே தியானிப்பவர் களாகவும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் என்னும் அரிஷ்ட வர்க்கத்தை வென்றவர்களாகவும், பொறுமையையே பூஷணமாகக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். இந்நகரத்தில், பகுத்தறிவற்ற பிராணிக

ளும் தமக்கு இயற்கையாய் ஏற்பட்டுள்ள பகைமையையும் விட்டு நட்பைக் கொண்டிருக்கின்றன. அறிவில்லாத குரங்குகள் இங் குமலையருவிகளில் மூழ்கி, மாணிக்கங்களை யெடுத்துப் பாறை யில் வைத்து, சிவலிங்கமாகப் பாவித்து, அருவிநீரை அபிஷே கித்து, தமது கரியவிரல்களால் மலர்களைக் கொய்து சூட்டிக் கனிகளை நிவேதித்து வழி படுகின்றன. கிளிகள் யாவும் முனிவ ர்கள் கூறும் வேதவாக்கியங்களைக் கேட்டுக் கேட்டுத் தாமும் அவ்வாறே கூறுகின்றன. ஆதலின் இந்நகரின் பெருமை அள விட முடியாதன்றே?

சாமா:—சாஸ்திரிகளே! அதிலும் நமது அரசனாகிய விக்கி ரம பாண்டியன் மனுநீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வருகி றானல்லவா? இவன் சுத்த வீரன்: படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இவை யாவையும அங்கமாகக் கொண்டவன்; செ ம்மனத்தான்; தண்ணளியான்; இன்சொல்லுடையான்; இவ னுடைய ஆட்சியில் எங்கும் களவர் பயமும் வியாதி பீடையும் இல்லை; பிராமணர் முதலிய வருணத்தார்களும் பிரமசாரி முத லிய ஆசிரமிகளும் தத்தம் தருமங்களைக் குறைவுறாமல் அநுஷ் டித்து வருகின்றனர். மேகமும் மாதம் மும்மாரி பொழிகின் றது. இவ்வரசன் அரசு செலுத்துவதில் எவரும் குறைகூற முடி யாதன்றே?

கோபா:—ஆமாம், தீக்ஷிதரே! நீர்சொன்னவையாவும் உண் மையே. இவ்வரசன் ஆட்சியில் ஒருவரும் முறைதவறி நடந்த தில்லை. இந்நகரில் வடக்கு வீதியில் விருபாக்ஷர் என்றொரு பிரா மணர் இருக்கிறாரல்லவா? அவரை உமக்குத் தெரியுமா?

சாமா:—ஓய்! என்ன நீர்கேட்பது ஆச்சரியமாயிருக்கிறது! அவரை அறியாதவர் ஒருவரு மில்லையே; அவர் பரமசாது; அவர் எப்பொழுதும் தர்மத்தையே செய்து வருகின்றார். பக வானிடம் உண்மையான பக்தியுள்ளவர்; அவர் இந்திரியங்களை யெல்லாம் வென்றவர். அவருக்கு முனிவரும் நிகராகமாட்டார். ஏனெனில் குடத்தினடியில் ஒருசில்லியிருந்தாலும், நீர் குடத் தில் தங்காமல் அதன்வழியாகஒழுகிவிடுவதுபோல, விஷயத்தில் ஒரு இந்திரியம் அழுந்தினாலும், விவேக அறிவு மனிதனிடத் தில் தங்காமல் அதன் வழியாகப்போய் விடுகின்றது.

(இன்னும் வரும்)

பண்டிட்-M. M. நாராயணசாமி அய்யர்.